# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 09 அதிர்வு 108 ஆனி 2026 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

Budget Friendly
Home Improvements Pty Ltd
Quality
Renovation Work
0400 287 198










ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம் ‘டன்டினொங்’ இல் புதியதோர் சேவை

BOC · PEOPLE'S BANK · COMMERCIAL BANK · HNB · Sampath Bank · UNION BANK · Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com

GRACE GROCERY
FRESH FINDS GREAT DEALS
INDIAN AND SRILANKAN

# GRACE GROCERY

INDIAN AND SRILANKAN GROCERY

**Our Current Location**

Casey Central (Narre Warren) and Clyde North next to ALDI/Bunnings

**Our New Locations Opening Soon**

- Mambourin Shopping Centre (Mambourin) - 2025 / • Farm Gate Local (Clyde) - 2025
- Ramlegh Shopping Centre (Clyde) - 2025 / • Orana Shopping Centre (Clyde) - 2026

● ஆனந்த வசந்த கிருஸ்ணமூர்த்தி




மரணம் எல்லாருக்கும் வரக்கூடியதுதான்... ஆனா, அது நம்மள எப்படி நினைச்சு பாக்குதுங்கிறதுல தான்யா இருக்கு முதல் மரியாதை!” - பாரதிராஜா

நாம் ஒருவரை எவ்வாறு நினைவில் வைத்திருக்கிறோம். சிலருக்கு அவர்களின் முகங்கள். பலருக்கு அவர்களின் குரல்கள். இயக்குநர் இமயம் பாரதிராஜா என்ற பெயரை நினைத்தாலே அவரது கூப்பிய கரங்களும், “என் இனிய தமிழ் மக்களே “ என்று ஒலிக்கும் அவரின் கனத்த குரலும் தானே. அந்தக் குரல் இன்று தன்னுடைய ஓசையை நிறுத்திக்கொண்டு விட்டது. தேனி மாவட்டத்தில் அல்லிநகரம் என்ற அழகான கிராமத்தில் 1941-இல் பிறந்த சின்னசாமி எனும் இயற்பெயருடைய பாரதிராஜாவுக்கு சிறுவயதிலிருந்தே சினிமா மீது ஆர்வம். சினிமாவில் சேர்ந்து நடிகராக வர வேண்டும் என்பதுதான் அவரின் கனவாக இருந்தது. “பள்ளியில் படிக்கும்போது நாடகங்களை இயக்கி நடிப்பேன். அப்போது கிடைத்த பாராட்டு நான் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசையை தூண்டியது. பராசக்தி வசனம் எல்லாம் அத்துப்படி. ‘சிவாஜியா, நானா?’ என்ற சவாலில் தான் சினிமா கனவில் சென்னை வந்தேன்,” என ஒரு பேட்டியில் கூறியுள்ளார் பாரதிராஜா. சென்னைக்கு வந்த ஆரம்பக் காலத்தில் கடுமையான வறுமை. ஆனால், சினிமா மீதான தாகம் குறையவில்லை. கன்னடத் திரையுலகின் ஜாம்பவான் புட்டண்ணா கனகல், பி. புல்லையா, ஏ. ஜெகநாதன் போன்ற முன்னணி இயக்குநர்களிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்து சினிமா என்னும் கலையின் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார். தனது தங்கை பாரதி மற்றும் தம்பி ஜெயராஜ் ஆகியோரின் பெயர்களை இணைத்து “பாரதிராஜா” என்று தனது பெயரை மாற்றிக்கொண்டார்.

1977-க்கு முன்பு வரை தமிழ் சினிமா எப்படி இருந்தது? செட்டிங் போடப்பட்ட ஸ்டுடியோக்கள், பவுடர் அப்பிய முகங்கள், செயற்கையான வசனங்கள் என நாடகத்தின் நீட்சியாகவே இருந்தன. அதை ஒற்றை ஆளாக உடைத்தெறிந்ததுதான் “16 வயதினிலே”.தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் (NFDC) உதவியோடு ஒரு கருப்பு-வெள்ளைப் படமாக எடுக்கத் திட்டமிடப்பட்ட இக்கதை, பின்னாளில் வண்ணப் படமாக மாறி தமிழ்த் திரையுலகின் தலையெழுத்தையே மாற்றியது. ஸ்ரீதேவி ‘மயில்’ ஆகவும், கமல் ஹாசன் ‘சப்பாணி’ ஆகவும், ரஜினிகாந்த் ‘பரட்டை’ ஆகவும் வாழ்ந்திருந்தனர். காரில் வந்து இறங்கும் ஹீரோக்களைப் பார்த்த மக்களுக்கு, சேற்றில் கால் வைத்து நடக்கும் சப்பாணியும், பாவாடை தாவணியில் திரியும் மயிலும் தங்களின் சொந்த பந்தங்களாகத் தெரிந்தனர்.” கிழக்கே போகும் ரயில், புதிய வார்ப்புகள், அலைகள் ஓய்வதில்லை, மண் வாசனை போன்ற படங்கள் மூலம் கிராமத்துக் காதலையும், சமூகக் கட்டமைப்புகளையும் பேசினார். ‘பாரதிராஜாவுக்குக் கிராமத்துப் படம் மட்டும்தான் எடுக்கத் தெரியும்’ என்ற விமர்சனத்தை உடைக்க, மேற்கத்திய பாணியில் ‘சிகப்பு ரோஜாக்கள்’ என்ற சைக்கோ த்ரில்லர் படத்தையும், ‘டிக் டிக் டிக்’ என்ற கிரைம் த்ரில்லர் படத்தையும் இயக்கித் தன் பன்முகத்தன்மையை நிரூபித்தார்.

பாரதிராஜாவின் திரைமொழி தனித்துவமானது. அவரின் படங்களை எந்த காட்சியிலிருந்து நீங்கள் பார்த்தாலும் ,அதில் அவரின் தனிமுத்திரையை வைத்து அவர் படம் என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.மரங்கள், ஓடும் நதிகள், மேயும் ஆடுகள், பறக்கும் பறவைகள் என இயற்கையைத் தனது கதையின் ஒரு கதாபாத்திரமாகவே மாற்றிவிடுவார். அவரின் கதாபாத்திரங்கள் நாம் அன்றாட வாழ்வில் காண்பவர்களைப் போல் இயற்கையாகவே படம்பிடித்திருப்பார்.அவரின் ஹீரோக்கள் பவுடர் அப்பாமல், கருகருவென தமிழ் மண்ணின் நிறத்தோடு வலம் வந்தனர். கதாநாயகிகள் வெள்ளையாக இருக்க வேண்டிய அவசியமில்லை, அவர்கள் மாநிறமாக இருந்தாலும் தங்களின் நடிப்பால் பேரழகியாகத் தெரிந்தனர். அவரின் படங்களில் இசை என்பது படத்துடன் ஒன்றிணைந்து காலத்தால் அழிக்க முடியாத எத்தனையோ பாடல்களை இளையராஜாவும், பாரதிராஜாவும் கொடுத்திருக்கின்றனர்.

பாரதிராஜா வெறும் காதல் படங்களை மட்டுமே எடுக்கவில்லை. சமூகத்தில் நிலவிய சாதியக் கொடுமைகளையும், மூடநம்பிக்கைகளையும் தனது கூர்மையான திரைக்கதையின் மூலம் சாடியிருக்கிறார். 1987 ல் வெளிவந்த வேதம் புதிது படமானது சாதியக் கட்டமைப்பையும், மதப் போலித்தனத்தையும் தோலுரித்துக் காட்டியது . சத்யராஜ் ‘பாலுத் தேவர்’ என்ற கதாபாத்திரமாகவே வாழ்ந்திருப்பார்.1994 ஆம் ஆண்டு வெளிவந்த கருத்தம்மா திரைப்படமானது மதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலவி வந்த ‘பெண் சிசுக்கொலை’ என்ற கொடூரமான வழக்கத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது. இப்படம் வெளியான பிறகு இக்கொடுமைக்கு எதிரான விழிப்புணர்வு மக்களிடையே பெருமளவில் ஏற்பட்டது என்று கூறினால் அது மிகையில்லை.

இயக்குநர் இமயம்’ பாரதிராஜா மற்ற சினிமா நடிகர்களைப் போல வெறும் திரையில் நடிப்பவரல்லர்.சமரசமற்ற தமிழ் உணர்வாளராகவும், சமூகப் போராட்டங்களின் முன்னணிப் போராளியாகவும் கடைசி மூச்சு வரையிலும் போராடியவர்.இலங்கையில் ஈழத்தமிழர்கள் இனப்படுகொலைக்கும், மனித உரிமை மீறல்களுக்கும் ஆளாக்கப்பட்ட காலகட்டங்களில், தமிழகத் திரையுலகை ஒருங்கிணைத்து முதன்முதலில் வீதியில் இறங்கிப் போராடிய ஆளுமை பாரதிராஜா என்பதை நாம் மறக்க முடியாது.அரசியல் அழுத்தங்களையும், தனது திரையுலக வணிகப் பாதிப்புகளையும் பொருட்படுத்தாது, தமிழ்த் திரைக் கலைஞர்களைத் திரட்டிப் பிரமாண்டப் பேரணிகளையும், தார்மீக உண்ணாவிரதப் போராட்டங்களையும் ஒருங்கிணைத்ததோடு தொடர்ச்சியாக ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்காக சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தொடர்ந்து குரல் கொடுத்தார்.தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரப் பிரச்சினையான காவிரி நீர் விவகாரத்தில், பாரதிராஜாவின் பங்களிப்பு மிக முக்கியமானது. நெய்வேலியில் திரையுலகினர் நடத்திய உரிமைப் போராட்டத்தில் கலந்துகொண்டு தமிழகத்தின் தண்ணீர் உரிமையை கடுமையாக வலியுறுத்தினார்.இதன் உச்சகட்டமாக, 2018-ஆம் ஆண்டு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி நடைபெற்ற போராட்டங்களின் போது, மத்திய அரசின் மெத்தனப் போக்கிற்குத் தனது கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்தார். தமிழர்களின் உரிமைக்காக, மத்திய அரசு தனக்கு வழங்கிய உயரிய கௌரவமான ‘பத்மஸ்ரீ’ விருதைத் திரும்ப ஒப்படைப்பதாக அதிரடியாக அறிவித்தார். இந்த அறிவிப்பு தேசிய அளவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியதோடு, காவிரிப் பிரச்சினையின் தீவிரத்தை டெல்லி வரை கொண்டு சேர்த்தது.

ஒரு இயக்குநராகத் தமிழ் சினிமாவின் பல நட்சத்திரங்களை உருவாக்கிய பாரதிராஜா, தன் மூத்த மகன் மனோஜ் பாரதிராஜாவையும் மாபெரும் நாயகனாக்க ஆசைப்பட்டார். அந்த எல்லையற்ற தந்தைப் பாசமே, அவரது திரைப்பயணத்தில் சில சறுக்கல்களுக்குக் காரணமாக அமைந்தது. 1999-ல் தன் மகனை அறிமுகம் செய்ய ‘தாஜ்மஹால்’ திரைப்படத்தை மிக பிரமாண்டமாகத் திட்டமிட்டார். ஏ.ஆர். ரஹ்மானின் இசை, வைரமுத்துவின் வரிகள் என மகா கூட்டணி அமைந்தது. அதுவரை எளிய பட்ஜெட்டில் யதார்த்த சினிமா எடுத்த பாரதிராஜா, மகனுக்காகப் பிரமாண்ட செட், சண்டைக் காட்சிகள் என வணிக சமரசங்களைச் செய்தார். பாடல்கள் ஹிட்டடித்தாலும், படம் வணிகரீதியாகத் தோல்வியடைந்தது.அடுத்ததாக மகனுக்காக அவர் இயக்கிய ‘அல்லி அர்ஜ/னா’ (2002) திரைப்படமும் தோல்வியைத் தழுவியது. 2000-களுக்குப் பின் மாறிவந்த புது தலைமுறை ரசனையையும், இளைஞர்களின் எதிர்பார்ப்பையும் பாரதிராஜா கணிக்கத் தவறியதால் தொடர்ந்து அவருக்கு தோல்விகள்.மகனைத் திரையுலகில் நிலைநிறுத்த அவர் எடுத்த தொடர் முயற்சிகளும் தயாரிப்புகளும், அவருக்குப் பெருமளவில் பொருளாதார நஷ்டத்தையும் கடுமையான மன உளைச்சலையும் தந்தன. எத்தனையோ பேரைச் செதுக்கிய ஒரு மாபெரும் திரைமேதை, தன் மகனின் எதிர்காலத்திற்காகத் தன் பிரத்தியேகத் திரைமொழியைச் சமரசம் செய்து சரிவைச் சந்தித்தார்.இயக்குநராகச் சறுக்கல்களைச் சந்தித்தபோது, அவர் ஒரு நடிகராகத் தன்னைத் தகவமைத்துக் கொண்டார். ஆயுத எழுத்து, பாண்டிய நாடு, குரங்கு பொம்மை, திருச்சிற்றம்பலம், மற்றும் மகாராஜா போன்ற திரைப்படங்களில் அவர் ஏற்ற குணச்சித்திர வேடங்கள், அவர் எவ்வளவு பெரிய நடிப்பு அரக்கன் என்பதை மீண்டும் நிரூபித்தன.

தன் மூத்த மகன் மனோஜ் பாரதிராஜாவின் திடீர் மறைவு, அவரை மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் முற்றிலும் உடைத்துப் போட்டிருந்தது. தன் உயிரினும் மேலாக நேசித்த மகனின் பிரிவு தந்த தாங்க முடியாத துயரமே அவருடைய இறுதி நாட்களை வேகப்படுத்தியது என்றே சொல்லலாம். சமீபத்திய பேட்டி ஒன்றில் பேட்டியில் “நான் மறைந்தாலும் என்னுடைய உடல் மட்டும்தான் இந்த மண்ணில் கலக்கும். என்னுடைய படைப்புகள் மக்களின் மனதில் வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பது எனக்கு தெரியும். அந்த நம்பிக்கை இருக்கிறது. ஆனால் நாம் நேசித்த மனிதர்கள், இடங்கள், நினைவுகள், இந்த அழகான உலகம்... இவை அனைத்தையும் விட்டுவிட்டு போக வேண்டுமென்ற எண்ணம் வந்தால் ஒருவித பயம் இருக்கத்தான் செய்கிறது” அவர் இந்த பூவுலகை விட்டு மறைந்தாலும் அவரின் கதாபாத்திரங்களான மயிலு, கருத்தம்மா, சப்பாணி, பரட்டை என்றும் நினைவில் இருப்பர்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:08 அதிர்வு: 107 வைகாசி 2026 தொ.பே:1800 960 162

# அநீதியின் அறுவடை!

காலச்சக்கரம் என்பது வெறும் விநாடிகளின் நகர்வு மட்டுமல்ல அது அசுர வேகமும், சமரசமற்ற நீதியும் கொண்ட ஒரு பிரபஞ்ச நியதி. வரலாற்றின் திசைவழியில் தங்களை அசைக்க முடியாத சாம்ராஜ்யங்களாகக் கருதிக்கொண்ட எவரையும், காலத்தின் இந்தச் சுழற்சி ஒருபோதும் மன்னிப்பதே இல்லை.

தற்காலிக அதிகாரத் திமிரால் அல்லது இராணுவ பலத்தால் தடுத்து நிறுத்திவிட முடியாத ஒரு பேராற்றல் இயற்கைக்கு உண்டு. "அறம் கூற்றாகும்" என்ற பழந்தமிழர் வாக்கு, வெறும் கவித்துவ வரிகள் அல்ல் அவை அதிகார மமதையில் அநீதி இழைப்பவர்களுக்கும், பலவீனமானவர்களை நசுக்கி ஆள்பவர்களுக்கும் காலம் வழங்கும் இறுதித் தீர்ப்பாகும்.

இன்று இலங்கையின் அரசியல் வானில் நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்கள், பிரபஞ்சத்தின் இந்த மாறாத விதியை மீண்டும் ஒருமுறை உலகிற்கு உரக்கச் சொல்லியிருக்கின்றன.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ராஜபக்சக்களின் ஆட்சிக் காலம் என்பது மிகக் கொடூரமான அத்தியாயம். தமிழ் மக்கள் மீது ஏவப்பட்ட ஒடுக்குமுறைகள் என்பது வெறும் அரசியல் நடவடிக்கையாக அன்றி, ஒரு இனத்தின் ஆன்மாவைச் சிதைக்கும் திட்டமிட்ட வன்முறையாகவே அரங்கேற்றப்பட்டது. கடத்தல், கோரமான வெள்ளை வேன் கலாசாரம், கட்டமைப்பு ரீதியான காணாமல் ஆக்கப்படுதல் என அந்த அநீதிகளின் பட்டியல் மிக நீளமானது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்ட அந்தப் பேரவலத்தையும், போருக்குப் பின்னரும் தொடர்ந்த இராணுவக் கெடுபிடிகளையும் அவ்வளவு எளிதில் எவராலும் கடந்து சென்றுவிட முடியாது.

அன்று தமிழர்களின் அழுகுரலும், நீதிக்கான ஏகத்தவிப்பும் அதிகாரப் போதையில் இருந்த ஆட்சியாளர்களின் செவிகளை எட்டவில்லை. அதிகாரம் என்பது தங்களுக்குக் கிடைத்த நிரந்தர வரம் என்றும், தங்களைக் கேள்வி கேட்க எவருமில்லை என்ற அகந்தையிலும் அவர்கள் ஆடிய ஆட்டம், இன்று அவர்களையே வேட்டையாடத் தொடங்கியிருப்பதுதான் காலத்தின் விந்தை.

அன்று அலட்சியப்படுத்தப்பட்ட அந்த மக்களின் கண்ணீரே, இன்று அவர்களின் சாம்ராஜ்யத்தை வீழ்த்திய தார்மீக வெடிமருந்தாக மாறியுள்ளது.

ஒரு காலத்தில் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானித்த ஒரு குடும்பம், இன்று சட்டத்தின் முன்னாலும் மக்கள் கோபத்தின் முன்னாலும் சிதறுண்டு கிடக்கிறது. அசைக்க முடியாத சக்தியாகத் திகழ்ந்தவர்களின் தற்போதைய நிலையை நோக்கும் போது, அதிகாரம் எவ்வளவு தற்காலிகமானது என்பது புலப்படும்.

மஹிந்த ராஜபக்ச, ஒரு காலத்தில் பேரரசர் போல் வலம் வந்த இவர், மக்கள் எழுச்சியின் ஆவேசத்தால் தனது அதிகார மையமான அலரி மாளிகையிலிருந்து தப்பியோட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். இன்று முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய அனைத்துச் சலுகைகளும் ரத்து செய்யப்பட்டு, ஒரு சாதாரண பிரஜையைப் போல சட்டத்தின் முன் கூனிக் குறுகி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ஷிரந்தி ராஜபக்ச, 'சிரிலிய' கணக்கு மோசடி தொடர்பான தீவிரமான நிதியியல் மோசடி விசாரணைகளை இவர் இன்று எதிர்கொண்டு வருகிறார்.

பஸில் ராஜபக்ச, ராஜபக்ச ஆட்சியின் மூலோபாய வகுப்பாளர் என்று போற்றப்பட்ட இவர், இன்று இலங்கையில் தங்குவதற்கு இடமின்றி, கைது உத்தரவுக்கு அஞ்சி அமெரிக்காவில் தஞ்சம் புகுந்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ச, இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய பாதுகாப்புச் செயலாளர் என்ற கர்வத்தில் இருந்த இவர், இன்று தான் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக நீதிமன்றங்களில் 'ரிட்' மனுக்களைத் தாக்கல் செய்து, ஒரு அவலமான தற்காப்புப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

இவர்களைத் தவிர, ராஜபக்ச குடும்பத்தின் இன்னும் சில வாரிசுகள் சட்டத்தின் பிடியிலிருந்தும் மக்களின் ஆக்ரோஷத்திலிருந்தும் தப்பிக்க நாட்டை விட்டே ஓடி, வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மஹிந்தவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ச பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தாலும், அவர் குற்றம் அற்றவர் என்பது நீதிமன்றம் ஊடாக உறுதியாகவில்லை. விசாரணை வேட்டை தொடரவே செய்யும்.

அதிகாரம் என்பது கையில் இருக்கும் வரை மட்டுமே ஒரு ஆயுதமாகச் செயல்படும். அவர்கள் உருவாக்கிய அதே சட்டமற்றத் தன்மையும், அதிகார மீறல்களும் இன்று அவர்களையே விழுங்கத் தொடங்கியுள்ளன.

அநீதி இழைக்கப்பட்டவர்களின் கண்ணீருக்கும், சிந்தப்பட்ட இரத்தத்திற்கும் பிரபஞ்சம் உரிய நேரத்தில் பதிலளிக்கும் என்பதற்கு ராஜபக்சக்களின் வீழ்ச்சியே சாட்சி.

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும்" என்ற முதுமொழிக்கு ஏற்ப, அன்று முள்ளிவாய்க்காலில் தமிழர்களை முடக்கிய அதே அதிகாரம், இன்று அந்த அதிகாரத்தைக் கையாண்டவர்களையே சட்டத்தின் பிடியில் முடக்கியுள்ளது.

இலங்கையின் சமகால அரசியல் வரலாறு உலகிற்கு உணர்த்தும் உண்மை மிகத் தெளிவானது. அதிகாரம் என்பது மக்களின் சேவையைப் பொறுத்தே நிலைக்கும் மாறாக, அதனைத் தனிநபர் நலனுக்கும் அடக்குமுறைக்கும் பயன்படுத்தும் போது, அதன் வீழ்ச்சி மிகக் கொடூரமானதாக அமையும்.



# இயக்குநர் இமயம் பாரதிராஜாவும் ஈழத்தமிழரும்: கலை கடந்த மனிதாபிமானக் குரல்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

நீண்டகாலமாகத் தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கென ஒரு தனித்துவமான பேரரசை உருவாக்கியவர் இயக்குநர் இமயம் பாரதிராஜா. தமிழ் சினிமாவை ஸ்டுடியோக்களின் செயற்கை வெளிச்சத்திலிருந்து கிராமங்களின் மண்வாசனைக்கும், யதார்த்தமான மனிதர்களின் வாழ்வியலுக்கும் அழைத்துச் சென்ற பெருமை இவருக்கு உண்டு. எனினும், பாரதிராஜா வெறும் கமராவுக்குப் பின்னால் நின்ற கலைஞர் மட்டுமல்ல; உலகத் தமிழர்களின் உரிமைகள், மொழி மற்றும் பண்பாடு சார்ந்து எழும் பிரச்சினைகளுக்குத் தன் கணீர்க் குரலால் களத்தில் நின்ற ஒரு சமூகப் போராளியும் ஆவார்.

### உலகத் தமிழர்களின் ஆறா வடு

உலகத் தமிழர்களின் வரலாற்றில் ஈழத்தமிழர் பிரச்சினை என்பது மிகவும் உணர்வுபூர்வமான, இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த ஒரு பக்கமாகும். இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த இனவெறி ஒடுக்குமுறை, உள்நாட்டுப் போர் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் தொப்புள்கொடி உறவுகளான தமிழக மக்களின் நெஞ்சங்களை எப்போதும் கொதிப்பிலேயே வைத்திருந்தன. இத்தகைய சூழலில், பாரதிராஜா ஈழத்தமிழர்களின் துயரங்களையும் அவர்களின் அரசியல் வேட்கையையும் ஆதரித்துத் தொடர்ச்சியாகத் தனது தார்மீகக் குரலை எழுப்பி வந்தார்.

### 2009 போர்க்களமும் திரைத்துறையின் எழுச்சியும்

ஈழத்தமிழர்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதே பாரதிராஜாவின் கருத்துகளின் மையப்புள்ளியாக இருந்தது. இலங்கையின் இனமோதல் உச்சமடைந்த காலங்களில், தமிழர்கள் எதிர்கொண்ட பேரழிவுகள் உலக சமூகத்தின் மனச்சாட்சியை உலுக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

குறிப்பாக, 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் போரின் இறுதிக்கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொன்றுகுவிக்கப்பட்ட சம்பவங்கள் அவரை ஆழமாகப் பாதித்தன. அந்தப் பேரிடர் காலத்தில், தமிழகத்தில் எழுந்த ஈழத்தமிழர் ஆதரவுப் போராட்டங்களில் பாரதிராஜா முன்னணிப் பாத்திரம் வகித்தார். தமிழ்த் திரைப்படக் கலைஞர்களை ஒன்றிணைத்து பிரமாண்டமான பொதுக்கூட்டங்கள், கண்டன ஆர்ப்பாட்டங்கள் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னின்று நடத்தினார். போரினால் சிதைக்கப்பட்ட தமிழ் மக்களின் அவல நிலையை சர்வதேச சமூகம் உற்றுநோக்க வேண்டும் என்று உலக அரங்கிற்குத் தன் குரல் மூலம் அழுத்தங்களைக் கொடுத்தார்.

### "எங்கிருந்தாலும் தமிழர் தமிழரே!"

பாரதிராஜாவின் ஈழ ஆதரவு நிலைப்பாடு என்பது தற்காலிகமான ஒரு அரசியல் நகர்வோ அல்லது வெற்று உணர்ச்சிப் பிரவாகமோ அல்ல. அது இனம், மொழி, பண்பாடு மற்றும் அடிப்படை மனித உரிமைகள் ஆகியவற்றின் அத்திவாரத்தில் எழுந்த ஒரு கொள்கைப் பிரகடனம் ஆகும். "எங்கிருந்தாலும் தமிழர் தமிழரே" என்ற உன்னதமான உணர்வை அவர் பல சந்தர்ப்பங்களில் மேடைகளில் முழங்கியுள்ளார்.

ஈழப் பிரச்சினை தொடர்பாகத் தமிழக அரசியல் களத்தில் பல்வேறு கருத்து வேறுபாடுகளும் பிளவுகளும் இருந்த போதிலும், பாரதிராஜா எப்போதும் தமிழர் ஒற்றுமையையே வலியுறுத்தி வந்தார். தமிழ்ச் சமூகத்தின் நீண்டகால வரலாறு, தனித்துவமான பண்பாடு மற்றும் தேசிய அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை அவர் தனது உணர்ச்சிமிக்க உரைகளில் அடிக்கடி சுட்டிக்காட்டத் தவறியதே இல்லை.

### ஒரு வரலாற்றுப் பதிவு

சுருக்கமாகக் கூறின், இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் ஈழத்தமிழர் ஆதரவு என்பது ஒரு சாதாரணத் திரைப்படக் கலைஞரின் அரசியல் கருத்தாக மட்டும் சுருங்கிவிடக் கூடியதல்ல. அது உலகத் தமிழர்களின் கூட்டு உணர்வுகளுடன் இணைந்த, நீதிக்கான ஒரு மனிதாபிமானக் குரலாகும். தமிழ் சினிமாவில் அவர் ஏற்படுத்திய புரட்சிகரமான தடம் எவ்வளவு முக்கியத்துவமோ, அதே அளவுக்குத் தமிழர் உரிமைகள் சார்ந்து அவர் காட்டிய நேர்மையும் துணிச்சலும் தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றில் என்றும் அழியாத ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

## வாசகர் களம்

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி

editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175



# பல்கலாசாரம் மறுக்கப்படுமா?

● சியமளா யோகேஸ்வரன்

அவுஸ்ரேலியாவில், பல தசாப்தங்களாக ஓரங்கட்டப்பட்ட அரசியல் கட்சியாக இருந்த One Nation கட்சியானது இப்போது பிரதான கட்சிகளுக்கு சவால் விடும் வகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்திருக்கின்றது. குடியேற்றம் முதல் கருக்கலைப்பு வரை கூட்டாட்சி அரசின் பல்வேறு கொள்கைகளைக் கடுமையாக விமர்சித்ததன் மூலம் இந்தக்கட்சி பிரபலத்தன்மையை அடைந்திருக்கின்றது என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக இருந்தாலும், குடியேற்றத்தை மறுதலிக்கும் கட்சியொன்றின் அபாரமான வளர்ச்சியானது, அதிகரித்து வரும் போட்டிகளால் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பாதிப்புகளின் பிரதிபலிப்பாகவே கருதப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டு Oxley தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த Pauline Hanson 1997 ஆம் ஆண்டு Queensland மாநிலத்தில் One Nation கட்சியைத் தொடங்கினார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய முதலாவது உரையில், “அவுஸ்திரேலியா ஆசிய மக்களால் நிரம்பி வழியும் அபாயத்தில் உள்ளது” என்றுதான் நம்புவதாகக் கூறியது மிகவும் சர்ச்சைக்குரியதாகவும், மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

2025 கூட்டாட்சி தேர்தலில் 6.4% தேசிய முதன்மை வாக்குகளைப் பெற்றிருந்த One Nation கட்சிக்கு, 2025ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வெளியிடப்பட்ட கருத்துக் கணிப்புகளின் அடிப்படையில் 10% முதல் 14% வரையில் முதன்மை வாக்கு ஆதரவு அதிகரித்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அத்துடன் 2026 ஆம் ஆண்டில் வெளியான சில கருத்துக் கணிப்புகளின் படி One Nation கட்சியால் கூட்டணிக் கட்சியை (Coalition) முதன்மை வாக்குகளில் முந்த முடியும் என்றும், லேபர் கட்சியுடனான வாக்குகளின் இடைவெளியைக் குறைக்க வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்துக் கணிப்புகளில் அதிக ஆதரவு இருப்பது மட்டும், நாடாளுமன்றத்தில் அதிக இடங்களை வெல்வதை உறுதி செய்ய மாட்டாது என்ற போதிலும் செனட்டில் (Senate) இந்தக் கட்சியின் செல்வாக்கானது அதிகரிக்க வாய்ப்பிருக்கின்றது. அத்துடன் பலமான ஒரு மாற்றுக்கட்சியாக இருக்கும் நிலையில் முக்கியமான கட்சிகளின் கொள்கைகளை மாற்றுவதிலும் அல்லது மறுபரிசீலனை செய்யத் தூண்டக்கூடிய வல்லமையைப் பெற்று விடுவதிலும் முக்கியமான பங்கு வகிக்க வாய்ப்பிருக்கின்றது.

Pauline Hansond; அரசியல் விவாதங்கள் மக்களின் சிந்திக்கும் திறனில் மாற்றங்களை உண்டாக்குவதுடன் நின்றுவிடாமல் வாக்கு வங்கியிலும் பெருமளவு மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதையே அண்மைய புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சமீபத்திய குயின்ஸ்லாந்து (Queensland) கருத்துக் கணிப்பொன்றில், கிராமப்புற மற்றும் பிராந்தியப் பகுதிகளில் One Nation-க்கு அதிகமான ஆதரவு இருப்பதுடன் இளைஞர்கள் மத்தியிலும் அவருக்கு ஆதரவு அதிகரித்து வருவதாக சொல்லப்படுவதற்கு வலுவான காரணங்கள் இருக்கின்றன. 1998 குயின்ஸ்லாந்து மாநிலத்தில் கிடைத்த வெற்றியானது, மாநிலத்தின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது பொருளாதார ரீதியில் பின் தங்கிய பகுதியிலேயே கிடைத்ததாகக் காணப்படுகின்றது. இவை பொதுவாக குடியேற்ற மக்கள் குறைவாகவும், வெளிநாட்டுச் சுற்றுலாவை அதிகம் சார்ந்திராத பகுதிகளாகவுமே இருக்கின்றன.

அதிகரித்து வரும் செலவுகள், தங்குவதற்கு வீடுகள் கிடைக்காமை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வீடுகளை வாங்குவதிலும் வாடகையைச் செலுத்துவதிலும் உள்ள சிரமங்கள், அதிகரித்த குடியேற்றத்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய அசௌகரியங்கள், லேபர் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் மீதான அதிருப்தி போன்ற காரணங்களால் சில வாக்காளர்கள் One Nation-ஐ நோக்கி நகர்ந்துள்ளனர். இக்கட்சியினது நடவடிக்கைகளுக்கும், பிரசார நடவடிக்கைகளுக்கும் “Fire the Liar” என்ற நிதி திரட்டும் பிரசாரத்தின் மூலம் நன்கொடையாளர்களிடமிருந்து 3 மில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையைக் குறுகிய காலத்தில் திரட்டியிருப்பது அதிகரித்து வரும் செல்வாக்கைக் காட்டினாலும், ஆங்காங்கே Pauline Hansonக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

One Nation தனது ஆரம்ப காலங்களில், பூர்வகுடியினர் (Indigenous) தொடர்பான பிரச்சினைகள், குடியேற்றம், துப்பாக்கிச் சட்ட சீர்திருத்தங்களுக்கு எதிரான அதிருப்தி என்பவற்றைப் பயன்படுத்தி வளர்ந்தது. அவுஸ்திரேலியர்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்கினாலும், உள்ளூர்வாசிகளின் வாழ்க்கைத்தரம் குடியேற்றவாதிகளால் பாதிக்கப்படுகின்றது என்ற துருப்புச்சீட்டு பல தரப்பட்ட அரசியல்வாதிகளாலும் அவ்வப்போது முன் வைக்கப்பட்டு மக்களின் கவனத்தை ஈர்ப்பது வழமையாக இருக்கின்றது.

1998 குயின்ஸ்லாந்து மாநிலத்தில் கிடைத்த வெற்றியானது, மாநிலத்தின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது பொருளாதார ரீதியில் வீழ்ச்சி ஏற்பட்ட பகுதியாகவே காணப்படுகின்றது. இவை பொதுவாக குடியேற்ற மக்கள் குறைவாகவும், வெளிநாட்டுச் சுற்றுலாவை அதிகம் சாராத பகுதிகளாகவும் இருந்தன. One Nation தனது ஆரம்ப காலங்களில், பூர்வகுடியினர் (Indigenous) தொடர்பான பிரச்சினைகள், குடியேற்றம், துப்பாக்கிச் சட்ட சீர்திருத்தங்களுக்கு எதிரான அவுஸ்திரேலியப் பழங்குடியினரான அபோரிஜினல் மக்கள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் தீவுவாசிகள் (Torres Strait Islander peoples) குறைந்தது 65,000 ஆண்டுகளாக அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வந்தாலும் அவர்கள் இன்று புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள். உள்ளூர்வாசிகள் என்று தம்மை அடையாளப்படுத்தினாலும் அவர்களும் இங்கு முன்னொரு காலத்தில் குடியேறியவர்கள் என்ற உண்மையைப் புறந்தள்ளி, தம்மை முன் நிலைப்படுத்திய கொள்கை ஒன்று முதன்மை பெற்றுள்ளது என்பது கவனத்துக்கு உரியதொன்று.

அவுஸ்திரேலிய மக்கள் தொகையில் சுமார் 30% பேர் குடியேறிகள் ஆவர். கடந்த 40 ஆண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சியின் சுமார் 50% குடியேற்றத்தால் ஏற்பட்டிருக்கின்றது என்ற தரவின் மூலம் அவுஸ்ரேலியா குடியேற்றவாதிகளால் நிரப்பப்படுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். திறமையான பணியாளர்களுக்கான பற்றாக்குறையை நிரப்ப, அதாவது நவீன தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், நிதி மற்றும் ஆற்றல் துறைகளுக்கு பிற நாடுகளிலிருந்து திறமை மிக்கவர்கள் தேவைப்படுவதால் இந்த அதிகரிப்பு நிகழ்ந்திருக்கின்றது.

அவுஸ்திரேலியாவில் குடியேற்றம் குறித்து நடைபெறும் விவாதங்களின் பின்னணியில் மருத்துவர்கள், செவிலியர்கள், பொறியாளர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் போன்ற திறனாளிகளுக்குப் பற்றாக்குறை இருக்கின்றது என்பது உண்மையான நிலைவரமாகும். பொறியியல் பணியாளர்களில் சுமார் 62% சதவீதம், மருத்துவத் துறையில் பணிபுரிபவர்களில் சுமார் 30% சதவீதம், கிராமப்புறங்களில் பணிபுரியும் மருத்துவர்களில் சுமார் 50% பேர் வெளிநாட்டில் பிறந்தவர்களே.

குடியேற்றம் தொடர்பான விவாதங்களில் ஒரு புறம் திறமையான பணியாளர்களின் பற்றாக்குறையை நிரப்புவதில் குடியேறிகள் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள் என்று வாதிடப்படுகிறது. மறுபுறம், அதிகரிக்கும் மக்கள்தொகை வீட்டு வசதி, போக்குவரத்து, மருத்துவம் மற்றும் பிற உள்கட்டமைப்புகளின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது என்ற கவலையும் முன்வைக்கப்படுகிறது.

பாலின் ஹான்சன் குடியேற்றத்தை மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் மற்றும் கணிசமாகக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அதிக அளவிலான குடியேற்றம் அவுஸ்திரேலியாவின் வீட்டுக்கான பற்றாக்குறையை மோசமாக்குகிறது, வாழ்க்கைச் செலவை அதிகரிக்கிறது என்று அவர் தொடர்ந்து வாதிட்டு வருகிறார்.

அவரது நிலைப்பாட்டின் முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு:

1. விசாக்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்

நிரந்தர மற்றும் தற்காலிக குடியேற்றம் உட்பட, வெளிநாட்டு மாணவர்களையும் சேர்த்து, ஆண்டுக்கு மொத்தம் 130,000 விசாக்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்ற கடுமையான உச்சவரம்பை அவர் முன்வைக்கிறார்.

மாணவர்கள் அடுத்த கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முன்னர் மீண்டும் தம் நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்றும் சொல்லப்படும் நிலையில் வெளிநாட்டு மாணவர்கள் அவுஸ்ரேலியாவின் அந்நிய வருமானத்தில் பெரும் பங்கு வகிப்பதுடன், பகுதி நேர வேலையாகச் சுத்தம் செய்தல், உணவகங்களில் வேலை செய்தல், சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளைப் பேணுதல் என்பவற்றிலும் ஈடுபடுகின்றார்கள் என்பதை மறுக்க முடியாது.

2. குடியுரிமை பெறுவதற்கான கடுமையான நிபந்தனைகள்

புதிய குடியேறிகள் அவுஸ்திரேலிய குடியுரிமைக்கு விண்ணப்பிக்கவும் அல்லது சமூக நலன்களை (welfare benefits) பெறவும் முன் எட்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

3. அவுஸ்திரேலிய சமூகத்தில் ஒன்றிணைதல் (Assimilation)

குடியேறிகள் அவுஸ்திரேலிய சமூகம், கலாச்சாரம் மற்றும் மதிப்புகளுடன் முழுமையாக ஒன்றிணைய வேண்டும் என்று ஹான்சன் வலியுறுத்துகிறார். மேலும், அவுஸ்திரேலிய மதிப்புகளுடன் ஒத்துப்போகாத ’தீவிரவாதக் கொள்கைகள்’ (extremist ideologies) கொண்ட நாடுகளிலிருந்து வரும் நபர்களுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்ற நிலைப்பாட்டையும் அவரது கொள்கை கொண்டுள்ளது.

வீட்டு நெருக்கடியானது குடியேற்றம் மற்றும் வெளிநாட்டவரின் வீட்டுக் கொள்வனவு காரணமாகவே என்பதால் வெளிநாட்டுக் குடிமக்கள் சொத்து வாங்குவதை கட்டுப்படுத்துவதன் மூலம் வீடு கிடைப்பதற்கான அழுத்தத்தை குறைத்து, விலையைக் குறைக்கும் என்பது அவரது வாதமாகும். வெளிநாட்டுக் குடிமக்கள் மற்றும் தற்காலிக விசா வைத்திருப்பவர்கள் அவுஸ்திரேலிய குடியிருப்பு மற்றும் சொத்துகளை வாங்குவதற்கு தடை விதிப்பதுடன், அவ்வாறு வைத்திருப்பவர்கள் தங்களுடைய சொத்துகளை இரண்டு ஆண்டுகளுக்குள் விற்க வேண்டும் என்றும் வாதிடுகின்றார். வீடுகள் முதலில் அவுஸ்திரேலியர்களுக்கே கிடைக்க வேண்டும் என்று தெரிவித்திருப்பது இளைஞர்களுக்கு நம்பிக்கை தருவதாகவே உள்ளது.

ஆனால் வெளிநாட்டவர்கள் சொத்து வாங்குவதற்கு Foreign Investment Review Board (FIRB) மூலம் கட்டுப்பாடு இருப்பதால் இக்கொள்கை முற்றிலும் புதியதல்ல. அரசாங்கம் அடாவடியாகச் சொத்தைக் கைப்பற்றினால் சட்டச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றது, காரணமில்லாமல் சொத்துப் பறிப்பு செய்தால் சர்வதேச வழக்குகள் மற்றும் வர்த்தக உறவுகளில் பாதிப்பு ஏற்படலாம்.

இவ்வாறு வெளிநாட்டவர்களுக்கு சிவப்புக் கொடியைக் காட்டினாலும் உள்ளூர்வாசிகளின் நலனைக் கருத்திற்கொண்டே அவரது தீவிரக் கொள்கைகள் அமைந்திருப்பதால் அடுத்த சந்ததியினர் மத்தியிலும், பின் தங்கிய பிராந்தியங்களிலும் அவரது செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. ஆனால் பல்கலாசார நாடான அவுஸ்ரேலியாவில் அவரது கொள்கைகள் பிரிவினையைத் தூண்டி மேலும் பிளவை ஏற்படுத்தி விடும் என்பது ஒரு பொதுவான கருத்தாக உள்ளதால் ஒரு சாரார் அவரது கொள்கைகளை முழுமையாக எதிர்க்கின்றார்கள். வாக்காளர்களின் சிந்தனையில் ஏற்பட்டிருக்கும் மாற்றமானது அரசியற்களத்தில் மாற்றத்தைக் கொண்டு வருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# இந்திய அரசியலையே ஆட்டம் காண வைக்கும் ‘கரப்பான் பூச்சி கட்சி’: தொடர்ந்து தாக்குப் பிடிக்குமா?

**இந்திய அரசியலிலும் சமூக ஊடக வெளியிலும் அண்மைக்காலமாகப் பெரும் புயலைக் கிளப்பிவரும் ஒரு விசித்திரமான டிஜிட்டல் இயக்கம் குறித்த ஆழமான அரசியல் அலசல் கட்டுரை.**

**● சபா. தயாபரன்**




இந்திய உச்ச நீதிமன்றத்தில் கடந்த 2026 மே 15 அன்று தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வில் ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கறிஞர் ஒருவர் தனக்கு மூத்த வழக்கறிஞர் அந்தஸ்து கோரி தாக்கல் செய்த மனு அது. அந்த விசாரணையின்போது, நீதித்துறைக்கு எதிராகச் சமூக ஊடகங்களில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் நியாயமற்ற விமர்சனங்கள் குறித்துத் தலைமை நீதிபதி தனது கடுமையான அதிருப்தியை வெளியிட்டார். அப்போது, சமூக ஊடகங்களில் நேரத்தைச் செலவிடும் இளைஞர்களையும் சமூக ஆர்வலர்களையும் ‘கரப்பான் பூச்சிகள்’ என்றும் ‘ஒட்டுண்ணிகள்’ என்றும் அவர் விமர்சித்திருந்தார். இந்த வார்த்தைகள் சமூக ஊடகங்களில் காட்டுத்தீயாகப் பரவி, பெரும் சர்ச்சையையும் விவாதத்தையும் கிளப்பின.

**எக்ஸ் (X) தளத்தில் உதித்த ‘டிஜிட்டல்’ புரட்சி**

அமெரிக்காவின் பொஸ்டன் பல்கலைக்கழகத்தில் மக்கள் தொடர்புத்துறையில் பட்டம் பெற்று, அங்கேயே வேலை தேடிக்கொண்டிருந்த முப்பது வயதான இந்தியப் பட்டதாரி அபிஜித் தீப்கே என்பவரின் கவனத்துக்கு இந்தச் செய்தி சென்றது. நாட்டின் கருத்துச் சுதந்திரத்தின் பாதுகாவலராகத் திகழ வேண்டிய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியே, தங்களின் ஆதங்கங்களை வெளிப்படுத்தும் இளைஞர்களைக் கரப்பான் பூச்சியோடு ஒப்பிட்டது அவருக்குள் பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. உடனடியாகத் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், “அனைத்து கரப்பான் பூச்சிகளும் ஒன்றாக இணைந்தால் என்ன நடக்கும்?” என்றொரு வினாவுடன் பதிவொன்றை இட்டார்.

அதற்கு இந்திய இளைஞர்களிடமிருந்து லட்சக்கணக்கில் ஆதரவுக் குரல்கள் குவிந்தன. “அடிபட்டாலும் சாகாமல் வாழும் கரப்பான் பூச்சி போல, சாதாரண மக்களின் குரலும் தொடர்ந்து ஒலிக்கும்” என்ற தத்துவத்தின் அடிப்படையில், ‘கரப்பான் பூச்சி ஜனதா கட்சி’ (Cockroach Janatha Party - CJP) vன்ற நையாண்டி அரசியல் அமைப்பு இணையத்தில் பிறந்தது. இது முறைப்படி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியல் மீம்ஸ்கள் மற்றும் நையாண்டிகள் மூலம் இயங்கும் ஒரு டிஜிட்டல் கூட்டமைப்பு. ஆனால், ஆச்சரியப்படும் விதமாக, ஒரே வாரத்திற்குள் மில்லியன் கணக்கான இளைஞர்கள் இதனைப் பின்தொடரத் தொடங்கினர். ஆளும், எதிர்க்கட்சிகளின் அதிகாரபூர்வப் பக்கங்களை விடவும் இதன் ’ரீச்’ பலமடங்கு எகிறியது.

**சோம்பேறிகளே வாரீர்!**
**விசித்திரமான தகுதி**

இந்த அமைப்பில் இணைவதற்குச் சில விசித்திரமான விதிகளை அதன் நிறுவுநர் அபிஜித் தீப்கே விதித்தார். தலைமை நீதிபதி சூர்யகாந்த் எகத்தாளமாக விவரித்தது போலவே, “வேலையில்லாதவராக, சோம்பேறியாக, எப்போதும் ஒன்லைனிலேயே நேரத்தைக் கழிப்பவராக இருக்க வேண்டும்” என்பதே அந்தத் தகுதி! கேலியாகத் தொடங்கப்பட்ட இந்த அறிவிப்பு, இந்தியாவின் தற்போதைய கல்வி, வேலைவாய்ப்பு முறைமையால் மன உளைச்சலில் இருக்கும் லட்சக்கணக்கான இளைஞர்களின் ஏமாற்றத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மாறியது.

“எங்கள் ஒன்லைன் குரல்களை இதுவரை எவருமே காதுகொடுத்துக் கேட்கவில்லை, சமூகத்தில் எமக்கான அங்கீகாரம் இல்லை” என்று குமுறிய இளைஞர்களின் விரக்தியை, இந்த ‘சிஜேபி’ (CJP) இயக்கம் செயற்கை நுண்ணறிவு (AI) படங்கள் மற்றும் கூர்மையான அரசியல் மீம்ஸ்கள் மூலம் அதிகார வர்க்கத்தின் முகத்தில் அடித்தாற்போல் வெளிப்படுத்தத் தொடங்கியது.

**ஜந்தர் மந்தரில் வெடித்த**
**‘கரப்பான் பூச்சி’ முகமூடிப் போராட்டம்!**

வெறும் இணையப் பக்கமாக இருந்த இந்த இயக்கம், கடந்த ஜூன் 6 அன்று டெல்லியின் வரலாற்றுப் புகழ்பெற்ற ஜந்தர் மந்தர் வீதிகளில் நேரில் இறங்கிப் போராடியபோதுதான் இந்திய அரசியல் உலகம் இதனை நிமிர்ந்து பார்க்கத் தொடங்கியது. தனது ஆதரவாளர்களை வழிநடத்த அமெரிக்காவிலிருந்து டெல்லிக்கு விமானம் ஏறி வந்திருந்தார் அபிஜித் தீப்கே. அங்கு திரண்டிருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கரப்பான் பூச்சி முகமூடிகளை அணிந்துகொண்டு, கைகளில் பாடப்புத்தகங்களையும் தேசியக் கொடியையும் ஏந்தியபடி நின்றனர்.

தொடர்ச்சியான பரீட்சைத்தாள் கசிவுகள், தொழில்நுட்பக் குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்ட தேர்வுகள் மற்றும் ‘நீட்’ (NEET) மருத்துவ நுழைவுத்தேர்வு முறைகேடுகளால் தற்கொலை செய்துகொண்ட மாணவர்களின் மரணங்களுக்கு நீதி கேட்டு இப்போராட்டம் வெடித்தது. “சர்வதேச அரங்கில் நடக்கும் போரையே தடுத்து நிறுத்த முடியும் என்று மார்தட்டும் பிரதமரால், ஏன் ஒரு தேர்வுத்தாள் கசிவைத் தடுக்க முடியவில்லை?” என்று கேள்வி எழுப்பிய போராட்டக்காரர்கள், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என முழக்கமிட்டனர்.

**சர்வதேச ஊடகங்களின் கவனிப்பும் அரசியல் ஆதரவும்**

இளைய தலைமுறையினரின் இந்தத் திடீர் எழுச்சியைச் சர்வதேச ஊடகங்களும் உற்றுநோக்கியுள்ளன. சிஎன்என் (CNN) ஊடகம் தனது கட்டுரையில், “இந்தியாவின் இளம் சமுதாயத்தினர் சலிப்படைந்து காணப்படுகின்றனர். ஊழல், பரீட்சைக் குளறுபடிகள், வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றால் இணையத்தில் முடங்கியிருந்த அவர்களின் விரக்தி, இப்போது வீதிகளில் பகிரங்கக் கோபமாக மாறியிருக்கிறது” என்று எழுதியுள்ளது. பாகிஸ்தானின் ‘டான்’ (DAWN) செய்தி நிறுவனம், இதனை ‘வைரல் கோக்ரோச் கட்சி’ என்று வர்ணித்துப் புகைப்படங்களைப் பிரசுரித்துள்ளது.

அரசியல் களத்தில் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி மொஹூவா மொய்த்ரா மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரரும் எம்பியுமான கீர்த்தி ஆசாத் போன்ற பிரபலங்கள் இந்த இயக்கத்திற்குத் தங்களின் ஆதரவுக் கரங்களை நீட்டியுள்ளனர். வழக்கம்போல ஆளும் பாரதிய ஜனதா தரப்போ, இது நாட்டின் இறையாண்மையைக் கெடுக்க நடக்கும் ஒரு ‘வெளிநாட்டுச் சதி’ என்று வழமையான பல்லவியைப் பாடுவதோடு, இளைஞர்கள் இத்தகைய எதிர்மறை அரசியலை நிராகரிக்க வேண்டும் என்றும் மறைமுகமாகக் கூறிவருகிறது.

**நீடிக்குமா இந்த நையாண்டி அரசியல்?**

டிஜிட்டல் மார்க்கெட்டிங் உலகில் இதுவொரு மாபெரும் திருப்பம் என்றாலும், இதன் எதிர்காலம் குறித்துப் பல கேள்விகளும் சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன. 2 கோடியே 30 லட்சத்திற்கும் அதிகமான ஒன்லைன் பின்தொடர்பவர்களையும், 2 லட்சத்திற்கும் அதிகமான பதிவுசெய்த உறுப்பினர்களையும் கொண்ட இந்த அமைப்பின் முதல் நேரடிப் போராட்டத்தில் வெறும் இரண்டாயிரத்திற்கும் குறைவானவர்களே கலந்துகொண்டது இதன் பலவீனத்தைக் காட்டுகிறது.

மேலும், சில அரசியல் விமர்சகர்கள், “இந்த இயக்கத்திற்கு அனுபவ முதிர்ச்சியோ, தெளிவான நீண்டகால இலக்குகளோ இல்லை சமூகத்தில் ஆளுமைமிக்க மூத்த தலைவர்கள் எவரும் இதனை வழிநடத்தவில்லை” என்று சுட்டிக்காட்டுகின்றனர். வெறும் மீம்ஸ்களையும் தற்காலிகக் கோபத்தையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு, இந்தியப் பெருநாட்டின் பாரம்பரியமிக்க அரசியல் கட்டமைப்பில் ‘கரப்பான் பூச்சி ஜனதா கட்சி’ ஒரு நிலையான மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? அல்லது காலம் கடந்து கரையும் ஒரு டிஜிட்டல் குமிழியாகப் போகுமா? - விடை காலத்தின் கைகளில்தான் உள்ளது!

# மாவீரர், போராளிகளின் தியாகங்களை வைத்து வாக்குவேட்டை!

## மனம் வெதும்புகிறார் வேந்தன்

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளியாகச் செயற்பட்டவர் வேந்தன் என்று அழைக்கப்படும் சிவநாதன் நவீந்திரா. தற்போது ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவராகவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவர்களில் ஒருவராகவும் உள்ளார்.**

**ஆயுதப்போராட்ட அரசியல், ஜனநாயக வழி அரசியல் என இரண்டு தளங்களிலும் அனுபவத்தைக் கொண்ட வேந்தன், இந்த நேர்காணலிலும் அவற்றையும் அவற்றின் குணவியல் வேறுபாடுகளையும் பேசுகிறார். சமகால அரசியல், தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, தமிழ்த்தேசிய அரசியல் நிலைவரம் எனப் பலவற்றையும் பேசும் வேந்தன், 2009 க்குப் பின்னர் கடந்த 12 ஆண்டுகளாக ஜனநாயக வழி அரசியலில் தீவிரமாகச் செயற்பட்டு, தனித்துவ அடையாளமாகியுள்ளார்.**

**தமிழரின் நிகழ்கால - எதிர்கால அரசியல் குறித்தும் இந்த நேர்காணலில் பேசுகிறார்.**

**இலங்கையில் தற்போது ஆட்சியிலிருக்கும் NPP (JVP) உட்பட தமிழ் அரசியல் கட்சிகளிலும் பலவும் ஆயுதப்போராட்ட அரசியல் பின்னணியைக் கொண்டவை என்பதால், வேந்தனுடைய குரல் (ஜனநாயகப் போராளிகள் கட்சி) முக்கியமானதாகிறது.**

**நேர்கண்டவர் - கருணாகரன்**

**கேள்வி: வடக்கு- கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்கின்ற நெருக்கடிகளுக்கும் தமிழ்பேசும் மக்களுடைய அரசியல் உரிமைப் பிரச்சினைக்கும் சாத்தியமான - வெற்றிகரமான - தீர்வு என்ன?**

பதில்: இலங்கைத்தீவிலே தமிழர்கள் எழுபது வருடங்களுக்கு மேலாக தமது அரசியல் உரிமையை பெற்றுக்கொள்வதற்கு அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடியிருக்கின்றார்கள். விடுதலைப் புலிகளுடைய ஆயுதப்போராட்டம் வளர்ச்சியடைந்தபோது விடுதலையை எட்டலாம் என்ற நம்பிக்கை பலருக்கும் இருந்தது. இதற்குத் தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவு இருந்தது. ஆனால், போராட்டம் தோற்கடிக்கப்பட்டு, நாம் விடுதலை அடையாமல் 2009 ஆண்டு முற்றிலும் புதியதொரு சூழ்நிலை உருவானது. இன்று தமிழர்கள் அநாதரவான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றர்கள். உரிமைக்கும் தீர்வில்லை. பாதிப்புகளுக்கும் தீர்வில்லை.

இலங்கைத் தீவிலே ஒரு நிரந்தர சமாதானமும் நல்லிணக்கமும் உருவாகவேண்டும் என்றால் சமஷ்டி முகையிலான ஆட்சியே தேவை. அதற்கு ஒரு புதிய அரசியல் அமைப்பும் அரசியற் சூழலும் கொண்டுவரப்படவேண்டும். அது வரும்வரையில் தற்போது அரசியல் அமைப்பிலே இருக்கின்ற மாகாண சபை ஆட்சி முறைமையை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். குறைந்த பட்சம் எமது மக்களுடைய தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளைத் தீர்த்து, எட்டவேண்டிய இலக்குகளை எட்டுவதற்கு அதைச் சரியான முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்கு இங்குள்ள தமிழ் தேசிய கட்சிகள் ஒற்றுமையாகப் பயணித்து, தங்களது அரசியல் பிரதிநிதித்துவத்தினை பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். அரசியல் தீர்வுக்கும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்.

**கேள்வி: அதை எப்படி எட்டுவது அல்லது எப்படிச் சாத்தியப்படுத்துவது?**

பதில்: முப்பது வருட ஆயுதப்போராட்டத்திலே நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 90 ஆயிரம்பேர் விதவைகளாக (பெண்தலைமைத்துவத்தில்) உள்ளனர். 15 லட்சத்திற்கும் மேற்பட்டோர் புலம் பெயர்ந்து சென்றுள்ளார்கள். இதற்கு மேலும் நாம் பாதிப்படையவோ சிதையவோ முடியாது.

இவ்வாறான நிலையில் - இன்றைய உலக அரசியல் சூழலில் - நாங்கள் ஜனநாயக வழியில் நின்று போராடித்தான் எமது உரிமைகளைப் பெறமுடியும். எமக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கான நீதியைப் பெறுவதற்குச் சர்வதேச ரீதியான ஆதரவைத் தூண்டலாம். மனித உரிமை மீறல்களை ஆதரமாக வைத்து அரசியல் தீர்வுக்கான நெருக்கடிகளை ஏற்படுத்தலாம். இதற்கு தமிழர்களது அரசியல் இருப்பு பலமானதாக இருக்கவேண்டும். இன்று தமிழர்களது அரசியல் பலமானதாக இருக்க வேண்டும். தமிழ் அரசியலைப் பலப்படுத்த வேண்டும் என்றால், நாம் பல கோணங்களில், மிக நுட்பமாகச் சிந்தித்துக் காய்களை நகர்த்த வேண்டும். பல கட்சிகளாகப் பிரிந்து சிதறுண்டு இருப்பது பலவீனத்தையே உண்டாக்கும். அந்த நிலையே தற்போது காணப்படுகின்றது. பல கட்சிகள் இருந்தாலும் எண்ணத்திலும் செயற்பாட்டிலும் நாம் ஒருங்கிணைந்து கொள்ள முடியும். அது பலத்தை உண்டாக்கும்.

இன்று தமிழ்த் தேசிய அரசியல் பிரதிநிதித்துவம் குறைவடைந்து செல்கின்றது. சிங்கள தேசியக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் வடக்கு- கிழக்கில் வளர்ச்சி பெற்று வருகின்றது. இந்த நெருக்கடிச் சூழலிலே தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு தங்களது பிரதிநிதித்துவத்தினை வலுப்படுத்திக் கொள்வது மிக அவசியமானது. ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமாகதான் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். இல்லாவிட்டால் தமிழ் மக்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாகும்.

**கேள்வி: இதைப் புரிந்து கொண்டு செயற்படக் கூடிய அளவுக்குத் தமிழ்க் கட்சிகளிடத்தில் கருத்தொருமைப்பாடும் ஒருங்கிணைந்து வேலை செய்யும் பண்பும் அதற்கான உளநிலையும் அறிவும் உண்டா?**

பதில்: தமிழ் கட்சிகளைப் பொறுத்த வரையிலே அவர்கள் தங்களது கட்சி அரசியலையும் வாக்கு அரசியலையுமே செய்து வருகின்றார்கள். இது மறுக்க முடியாத உண்மை. விடுதலையை நோக்கிய, தமிழ்ச் சமூகத்தின் பாதுபாப்பையும் இருப்பையும் குறித்த கவலைகளோ சிந்தனையோ குறைவாகவே உள்ளது. இதனாலேயே இங்கு தமிழ்க் கட்சிகளிடத்தில் ஒற்றுமை இல்லாமல் இருக்கிறது.

தமிழர்களது நலனில் மெய்யாகவே அக்கறை உள்ளவர்காக இருந்தால் விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையாக செயற்படலாம். நம்முடைய மக்களின் நிலையை மனதிற் கொண்டால் இந்த விட்டுக் கொடுப்புகளைச் செய்வது இலகு. அதைப்போல கடந்த கால அனுபவங்கள் எமக்கான அரசியல் பாடங்களாக உள்ளன. ஒற்றுமை இல்லையென்றால், எமக்கு ஆபத்தே. ஆனால் இந்த மனப்பாங்குடன் செயல்படும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடைய மனநிலை இல்லை. தமிழர்களது அரசியல் இருப்பையும் இல்லாமல் ஆக்கும் செயற்பாடுகளிலே தமிழ் தேசியம் பேசுகின்ற அரசியல் தலைவர்களது செயற்பாடு இருக்கின்றது. இந்த மனநிலை மாற்றமடைந்து தமிழ்மக்களுடைய நலனுக்காக விட்டுக்கொடுப்புக்களுடன் ஒற்றுமையாக செயற்படுவதே எமது அரசியல் இருப்பைப் பாதுகாக்கும். இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்கிறேன்.

**கேள்வி: அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்துச் செயற்படுத்தக் கூடிய ஆளுமையான தலைமைத்துவம் (ஆளுமை) தமிழ்ச்சூழலில் ஏன் இல்லை?**

பதில்: 2009 ஆண்டுக்குப் பின்னர் ஒருவரை ஒற்றத்தலைமையாக ஏற்கும் மனநிலையில் மக்கள் இல்லை. காரணம் மக்களுக்காக அர்ப்பணித்து வேலைசெய்யக்கூடிய தலைவர்கள் யாரும் இல்லை. மக்களுடைய வாக்குக்களைப் பெற்று மக்கள் பிரதிநிதி ஆகிவிட்டு, தங்களது நலனிலும் கட்சி நலனுக்காகவும் செயற்படும் தலைவர்கள் உள்ளவரை மக்கள் யாரைத் தலைவராக ஏற்றுக்கொள்வது?

ஆகவே மக்கள் நலன்சார்ந்து செயற்பட்டவர்களும் செயற்படக் கூடியவர்களும் அரசியலுக்கு உள்ளே வரவேண்டும். குறிப்பாக முன்பு போராளிகளாகச் செயற்பட்டவர்கள் அரசியலுக்குள்ளே வரவேண்டும். போராளிகளைப் பொறுத்த வரையிலே மக்களுக்காகத் தங்களை அர்ப்பணித்து வேலைசெய்தவர்கள். அவர்கள் மக்களுக்காக உழைத்தவர்கள். அவர்களது அரசியல் வருகை பெரும் மாற்றத்தை உருவாக்கும். அவர்களை மக்கள் ஆதரிக்க வேண்டும். அதற்கான தேவையைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

**கேள்வி: அப்படியென்றால் இதைச் சாத்தியப் படுத்தக் கூடிய சமூக மட்டத்திலான அழுத்தக் குழுக்கள் (Community level pressure groups), அறிவார்ந்த அரசியல் செயற்பாட்டு ஆளுமைகள் (Intelligent political activists), புத்திபூர்வமாகவும் பொறுப்போடும் செயற்படும் மாணவர் அமைப்புகள், நீதியுணர்ச்சியுள்ள ஊடகங்கள் (Honest medias) போன்றவற்றின் பணியும் பங்களிப்பும் எப்படியாக இருக்க வேண்டும்?**

பதில்: கடந்த காலத்தைப் பற்றிய சரியான பார்வையோடும், தற்போதைய சூழலின் தன்மையைப் பற்றிய புரிதலோடும் முன்வந்து இவர்கள் அனைவரும் செயற்பட வேண்டும்.

**கேள்வி: இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் நிலைப்பாடும் செயற்பாடுகளும் என்ன?**

பதில்: ஜனநாயகப் போராளிகள் கட்சியைப் பொறுத்தவரையிலே தமிழர்கள் எதிர்பார்க்கின்ற ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி அதிகாரம் தான் எமது இலக்காகும். ஆனால் அதை அடையும் வரையிலே தற்போது அரசியல் அமைப்புக்குள்ளே இருக்கின்ற மாகாணசபைக்கான அதிகாரங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால் தமிழர்களுக்கு இப்போது இருக்கின்ற குறைந்த பட்ச அதிகாரத்துடன் கூடிய அதிகாரப்பகிர்வு இது ஒன்றுதான். எமது இலக்கை அடையும் வரை இதனை நாம் பயன்படுத்தி மக்களுக்கான பணிகளை முன்னெடுப்போம்.

**கேள்வி: தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்வதில் தமிழ்க் கட்சிகள் நெருக்கடியையும் தடுமாற்றத்தையும் கொண்டிருப்பதாகத் தெரிகிறதே. உங்களுடைய பார்வையில் இதை எப்படிப் புரிந்து கொள்கிறீர்கள்?**

பதில்: நாம் எமது மக்களுடன் நெருக்கமாக இணைந்து செயற்பட்டால் எந்தச் சக்தியாலும் எமது மக்களை வெல்ல முடியாது. எம்மைத் தோற்கடிக்கவும் முடியாது.

**கேள்வி: வடக்கு - கிழக்குக்கான அதிகாரப் பகிர்வு, இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்றவற்றில் முஸ்லிம்களின் பங்கேற்பும் உடன்பாடும் இல்லாமல் சாத்தியப்பாடுகளும் வெற்றியும் கிட்டுமா?**

பதில்: அதிகாரப்பகிர்வு ஒன்று வரும்போது தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுடைய பங்களிப்பு முக்கியமானது. வடக்கு கிழக்கு பகுதியிலே அவர்கள் கணிசமான அளவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது வகிபாகம் முக்கியமானது. விடுதலைப்புலிகளுடைய காலத்தில் நடைபெற்ற சமாதான பேச்சு வார்த்தைகளின் போதும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஒரு ஊடகச் செவ்வியின் போது மிகவும் தெளிவாக ஒருவிடயத்தை கூறியிருந்தார். தமிழ் பேசும் முஸ்லிம் சகோதர்களையும் சேர்த்துக்கொண்டுதான் எமது பேச்சுவார்த்தைகளை முன்னேடுக்கின்றோம் என்று.

ஆகவே அவர்களது பங்களிப்பும் வடக்கு -கிழக்கு அதிகாரப் பகிர்வுக்கு முக்கியமானது. அது இல்லாமல் அதிகாரப்பகிர்வு சாத்தியப்படாது என்பது எமது நிலைப்பாடாகும்.

**கேள்வி: அப்படியென்றால் முஸ்லிம்களுடனான உடன்பாட்டுக்கான முயற்சிகளை எப்படி, யார் மேற்கொள்வது?**

பதில்: இன்று தமிழ்மக்கள் எந்த தமிழ்த் தேசியக் கட்களுக்கு அரசியல் அங்கீகாரம் வழங்கி இருக்கின்றார்களோ அவர்கள் முஸ்லிம் தரப்பு தலைவர்களுடன் அதிகாரப்பகிர்வு சம்பந்தமாகப் பேசவேண்டும்.

**கேள்வி: மாகாணசபைத் தேர்தலையே நடத்தாமல் NPP அரசாங்கம் இழுத்தடித்து வருகிறது. இந்த நிலையில் அது எப்படி இனப்பிரச்சினைக்கான தீர்வையும் அரசியலமைப்புத் திருத்தத்தையும் மேற்கொள்ளும்?**

பதில்: இந்த NPP அரசாங்கம் 'மாகாண சபை தேர்தலை நடத்துவோம். புதிய அரசியல் அமைப்பைக் கொண்டுவந்து தமிழர்களுக்கு தீர்வு வழங்குவோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம்' என்று பல வாக்குறுதிகளை வழங்கியே தேர்தலில் வென்று ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்று ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடமாகியும் எதனையுமே செய்யவில்லை. இவர்களும் முன்னைய அரசாங்கங்கள் போலத்தான் செயற்படுகிறார்கள். தமிழ் மக்களைப் பொறுத்த வரையிலே ஒவ்வொரு அரசாங்கங்களாலும் ஏமாற்றப்பட்டு வந்ததுதான் வரலாறு. இவர்களும் அதற்கு விதிவிலக்கானவர்கள் இல்லை என்பதையே தற்போதைய (NPP) அரசாங்கத்தின் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டுகின்றன.

**கேள்வி: விடுதலைப் புலிகள் இயக்கத்தில் செயற்பட்டவர்களை அதிகமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியில் நீங்கள் செயற்படும்போது கிடைக்கின்ற அனுபவங்கள்?**

பதில்: விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அரசியல் என்பது வாக்கு அரசியலுக்கு அப்பாற்பட்டது. அது விடுதலைக்கான செயற்பாட்டு அரசியலை அடிப்படையாகக் கொண்டது. முக்கியமாக ஆயுதப்போராட்டமாக. ஆனால் தற்போது நாம் செய்கின்ற ஜனநாயக வழி தேர்தல் அரசியல் என்பது வாக்குக்களை அடிப்படையாக கொண்டது. அரசியல் என்பது மக்கள் சேவை. அது போராளியாக இருந்த எங்களுக்குப் புதிதல்ல. அது எமக்கு நன்றாகப் பழக்கப்பட்டது.

ஆனால் வாக்கு வங்கியின் ஊடாகத் தேர்தலைச் சந்தித்து மக்கள் பிரதிநிதித்துவம் பெறுவது என்பது எமக்கு பல சவால்களைத் தருகிறது. மக்கள் செயற்பாட்டு அரசியலின் தன்மையைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்ற கேள்வி எமக்கு உண்டு. இதில் பல அனுபவங்களை 2009 -க்குப் பிறகு பெற்று வருகிறோம். இன்று பத்துவருடங்கள் கழிந்து உள்ளூராட்சி மன்ற தேர்தல் மூலமாக பல சபைகளில் மக்கள் பிரதிநிதிகளை உருவாக்கியிருக்கின்றோம். தொடர்ந்தும் மாகாணசபை, நாடாளுமன்றம் போன்றவற்றில் மக்கள் பிரதிநிதிகளை உருவாக்குவோம் என்ற நம்பிக்கையுடன் உள்ளோம். அதனூடாக தமிழ் மக்களுக்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி சிறந்த சேவையை செய்வோம் என்ற விருப்புடன் பயணிக்கின்றோம்.

**கேள்வி: பெரும்பாலான விடுதலைப் புலிகள் இயக்கப்போராளிகளின் இன்றைய வாழ்நிலை என்ன? அவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் எப்படியானவை? அவர்களுடைய அரசியல் ஈடுபாடு எப்படியாக உள்ளது?**

பதில்: தாயகத்திலே பெரும்பாலான போராளிகள் அவர்களது குடும்பத்திலே பொருளாதாரச்சுமையுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உடல் உறுப்புகளை இழந்த மாற்றுத்திறனாளிகளாக பல போராளிகள் மிகச் சிரமமான வாழ்க்கையில் உள்ளனர். பல பெண் போராளிகள் பல பிரச்சனைகளுடன் சமூகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக நிரந்தரமான தொழில்வாய்ப்பு இல்லை. தொழில் செய்ய முடியாத நிலையில் அங்கவீனமானவர்களாக இருப்பவர்கள்... தொழில்செய்யகூடிய நிலை இருந்தும் நிதி வசதிஇல்லாமல் இருப்பவர்கள். பலர் திருமணம் செய்யாமல், திருமண வயதைக் கடந்து நிலையில் இருப்பவர்கள். குறிப்பாகப் பெண்போராளிகளின் தேவைகள்... இவ்வாறு பல பிரச்சினைகளுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் பல போராளிகள் குடும்பங்களுக்கு தொழில் முயற்சிகளைச் செய்து கொடுத்திருக்கின்றன. ஆனால், இது இன்னும் போதாமலேதான் உள்ளது. ஒரு சரியான கட்டமைப்பு இருந்திருக்கமாக இருந்தால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை முடிந்த அளவுக்கு எல்லோருக்குமானதாக மாற்றியிருக்க முடியும். சிலர் தங்களுடைய கடினமான முயற்சியால் தொழில் செய்து கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு பல சவால்களுக்கு மத்தியிலும் போராளிகளாகச் செயற்பட்டவர்கள் இன்று மக்களுக்கான அரசியல் அங்கீகாரத்துக்காகச் சிந்திக்க வேண்டியுள்ளது. இதேவேளை பல போராளிகள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும்.



**கேள்வி: ஒரு காலத்தில் மிகப் பெரிய ஆற்றலோடும் ஆளுமையோடும் சமூக அங்கீகாரத்தோடும் இருந்த விடுதலைப்புலிகள் இயக்கத்தின் போராளிகள் இன்று அத்தகைய பெறுமானங்களை இழந்திருப்பது ஏன்?**

பதில்: ஆயுதப் போராட்டகாலத்தில் தமிழர்களுக்கான விடுதலையை அடைந்துவிடலாம் என்ற பெரும் நம்பிக்கையோடு பயணித்த போராளிகள், அந்த இயக்கம் அடியோடு அழிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் மனநிலையில் ஒரு அதிர்ச்சிகரமான நிலை ஏற்பட்டது. இனி எதுவுமே சரிவராது என்கின்ற மனநிலை பலரிடத்திலும் காணப்படுகின்றது. ஜனநாயக வழி தேர்தல் அரசியலில் போராளிகள் பயணித்தது கிடையாது. அதில் பழக்கமும் இல்லை. யுத்தம் முடிவடைந்த பின்னர் எங்களுக்கான அரசியல் அங்கீகாரத்துக்கான ஒரே வழி ஜனநாயக வழி அரசியல் தான். அதன் ஊடாகவே எங்களுக்கான அங்கீகாரத்தையும் மக்களுக்கான சரியான நேர்மையான சேவையையும் செய்ய முடியும் . இதற்காக ஜனநாயக வழி அரசியலில் போராளிகள் நம்பிக்கையுடன் செயற்பட்டு அதில் வெற்றி பெற்று, தங்களுடைய இழந்துபோன பெறுமானங்களை பெற முடியும். மக்களுக்கான நன்மைகளையும் தொடர முடியும்.

**கேள்வி: அரசாங்கம் போராளிகளை மதிப்பிறக்கம் செய்யும் முயற்சியிலேயே தொடர்ந்தும் ஈடுபடுகிறது. அரசியல் ரீதியாக அவர்கள் வலுப்பெறக் கூடாது. அப்படி வலுப்பெற்றால் அது தமிழ்த் தரப்பைப் பலமானதாக ஆக்கி விடும் என்று அஞ்சுகிறது. ஆகவே போராளிகளை அது அரசியல் அரங்கிலிருந்து தூர விலக்கவே விரும்பும். தமிழ் அரசியற் தரப்புகளும் போராளிகளுக்கு உரிய இடத்தையும் மதிப்பையும் அளிக்கவில்லையே? இதற்கான காரணம் என்ன?**

பதில்: காலம் பதில் சொல்லும். அந்தப் பதிலை நாம் காலத்துக்கு அளிக்க வேண்டும்.

**கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் தலைவர் பிரபாகரனின் பெயரையும் மாவீரர்களின் தியாகத்தையும் போராளிகள் ஆற்றிய வீர சாதனைகளின் பெறுபேறுகளையும் தங்களுடைய அரசியல் மூலதனமாகக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய (விடுதலைப் புலிகள் ஆதரவு) கட்சிகள் போராளிகளுக்கான இடத்தை வழங்காதிருக்கும் சூட்சுமம் என்ன?**

பதில்: இன்று மாவீரர்கள், போராளிகளது தியாகங்கள் அரசியல்வாதிகளுக்கும் அதை வைத்து பணம் சம்பாதிக்கும் சிலருக்கும் ஒரு பெரிய முதலீடாக மாறியுள்ளது. இதைக் கண்ணூடாகப் பார்க்கின்றபோது பெரும் மனவேதனை ஏற்படுகின்றது. அரசியல்வாதிகள் மாவீரர்களது தியாகங்களை வைத்து அரசியல் செய்து வாக்குச் சேகரித்து அதில் வெற்றிபெற்று வருகிறார்கள். ஒரு சிலர் மாவீரர்களது நினைவு நாட்களைச் செய்து பணம் சம்பாதிக்கின்றார்கள். இதை எல்லாம் பார்க்கின்றபோது இதற்காகவா நாங்கள் போராடி இத்தனை தியாகங்களைச் செய்தோம்? என்கின்ற மனக்கவலை ஏற்படுகின்றது.

ஒவ்வொரு போராளிகளும் மாவீரர்களும் தங்களைத் தியாகம் செய்தது இந்த மக்களுடைய விடுதலைக்காகவே. இன்று அந்த நிலை மாறி போராளிகளை சமூகத்திலே வேண்டாதவர்களாக பரப்புரை செய்து அவர்களது அரசியல் அங்கீகாரத்தைத் தடுத்து, தங்கள் அரசியலில் எங்கள் தியாகங்களை பயன்படுத்தி வெல்கிறார்கள். இதை எங்களது மக்களும் போராளிகளும் விளங்கிகொள்ள வேண்டும். போராளிகளுக்கான அரசியல் களம் சரியான முறையில் திறக்கப்பட்டால் இவர்களால் தங்களுக்கான குறுகிய அரசியலைச் செய்யமுடியாது. மக்கள் ஏற்று, அங்கீகரித்துக்கொள்வார்கள் என்கின்ற ஒரே காரணத்துக்காகவே போராளிகளுக்கு கட்சிகள் சந்தர்ப்பம் கொடுக்க மறுக்கின்றன. இதனை நாங்கள் புரிந்துகொண்டு எங்களுக்கான அரசியல் அதிகாரத்தை பெற உழைக்க வேண்டும் என்பது எங்களது நிலைப்பாடாகும்.

**கேள்வி: போராட்டத்தில் மிகுந்த அர்ப்பணிப்போடு செயற்பட்டுத் தங்களுடைய உடல் உறுப்புகளையே இழந்திருக்கும் பல ஆயிரக்கணக்கான போராளிகள் இந்த நிலத்தில் (தாயகத்தில்) மிகக் கஷ்டமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான உதவிகளும் ஆதரவும் முறையாக இன்னும் இல்லாதிருப்பது ஏன்?**

பதில்: தாயகத்திலே இருக்கின்ற விழுப்புண் அடைந்து அங்கவீனமான போராளிகளுக்கு அரசாங்கத்தால் எந்த பெரிய அளவிலான உதவித்திட்டங்களும் இல்லை. கூடுதலாக புலம்பெயர்ந்த அமைப்புக்கள் ஆகவும் தனிநபர்கள் மூலமாகவும் தொழில் வாய்ப்புக்கான உதவித் திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இது எல்லா போராளிகளுக்கும் கிடைத்துள்ளதா என்றால் அது கேள்விக்குறியாகவே உள்ளது. இங்கு ஒரு சரியான கட்டமைப்பு இல்லை. புலம்பெயர் தேசத்திலும் சரியான ஒரு கட்டமைப்பு இல்லை. நாங்கள் தளத்திலும் புலம்பெயர் தேசத்திலும் பல பிரிவுகளாக பிரிந்துபோய் செயல்படுகின்றோம். இதை நாங்கள் புரிந்து கொண்டு முதலிலே ஒன்றுபடவேண்டும். இல்லாவிட்டால் எங்களுக்கான எந்த செயற்திட்டங்களிலும் நாங்கள் வெற்றி காணமுடியாது.

எங்களுக்கான ஒரு அரசியல் அங்கீகாரம் கிடைக்குமாக இருந்தால் சரியான தகவல்களை திரட்டி இந்தப் போராளிகளுக்கான சரியான வாழ்வாதாரத் திட்டங்களைச் செய்ய முடியும். அதற்கான அங்கீகாரத்துடன் செயற்படமுடியும். போராளிகளுக்கான அரசியல் அங்கீகாரமே எல்லாவற்றுக்குமான தீர்வாக இருக்கும் என்பது எமது நிலைப்பாடாகும்.

**கேள்வி: போராளிகளின் பேரால் புலம்பெயர் நாடுகளில் திரட்டப்படும் நிதி தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் ஆதரவுச் சக்திகளின் கைகளில் உள்ள நிதி பற்றியும் கடுமையான விமர்சனங்கள் உள்ளனவே. இது தொடர்பான உண்மை நிலை என்ன? ஜனநாயகப் போராளிகள் இது தொடர்பாக எத்தகைய நடவடிக்கையை அல்லது நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது?**

பதில்: விடுதலைப்போராட்டத்துக்காகவே குறித்த நிதி திரட்டப்பட்டது. அது போராட்டத்துக்கும் போராட்டத்தில் அர்ப்பணித்தவர்களுக்குமே பயனாக வேண்டும். இல்லையென்றால், அது துரோகமாகும். அநீதியாகும். போராளிகளின் மாவீரரின் அர்ப்பணிப்பினால் உருவான மதிப்பினால்தான் அந்த நிதியை மக்கள் அளித்தனர். அதனை விடுதலைக்கானதாக பயன்படுத்துவது சம்பந்தப்பட்டோரின் முன்னுள்ள பொறுப்பாகும். இதை மக்களும் வலியுறுத்த வேண்டும்.

■

# தீபெத் – தாய்வான்: சீனாவின் இரட்டை நிலை ஆதிக்க அரசியல்!

● ஜங்கரன் விக்கினேஸ்வரா

தென்கிழக்கு ஆசியாவின் இந்த நூற்றாண்டு உலக அரசியலில், தீபெத் மற்றும் தாய்வான் ஆகிய இரு பிராந்தியங்களும் மிக முக்கியமான பேசுபொருள்களாக உருவெடுத்துள்ளன. சீனாவின் தேசிய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஆதிக்கம் தொடர்பான விவாதங்களின் மையப்புள்ளியாக இவ்விரு தேசங்களும் விளங்குகின்றன. ஆனால், தீபெத்தையும் தாய்வானையும் பெய்ஜிங் அணுகும் விதம் குறித்து சர்வதேச அளவில் பல்வேறு கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக, மக்களின் சுயநிர்ணய உரிமை என்று வரும்போது சீனா கடைப்பிடிக்கும் நிலைப்பாடு பலரால் ஒரு தெளிவான 'இரட்டை நிலை ஆதிக்க அரசியல்' என்றே கருதப்படுகிறது.




### ஆசியாவின் கூரையை மூடிய சீன நிழல்

'ஆசியாவின் கூரை' என வர்ணிக்கப்படும் தீபெத், பல நூற்றாண்டுகளாகத் தனக்கேயான தனித்துவமான பௌத்த மதம், ஆழமான கலாசாரம் மற்றும் சுயாட்சி அரசியல் அடையாளத்தைக் கொண்டிருந்தது. 1949ஆம் ஆண்டு மாசேதுங் தலைமையில் 'மக்கள் சீனக் குடியரசு' நிறுவப்பட்டதைத் தொடர்ந்து, 1950ஆம் ஆண்டில் சீன மக்கள் விடுதலைப் படை (PLA) தீபெத்திற்குள் அதிரடியாக நுழைந்தது. பின்னர் 1951இல் திணிக்கப்பட்ட 'பதினேழு அம்ச ஒப்பந்தம்' மூலம் தீபெத் சீனாவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டதாக பெய்ஜிங் இன்றும் வாதிடுகிறது. ஆனால், பல தீபெத்தியர்கள் இந்த ஒப்பந்தம் சுதந்திரமான சூழலில் ஏற்படுத்தப்படவில்லை என்றும், துப்பாக்கி முனையில் உருவான அரசியல் அழுத்தத்தின் விளைவே இது என்றும் கூறுகின்றனர்.

இதன் விளைவாக, 1959ஆம் ஆண்டு தீபெத்தின் தலைநகரான லாசாவில் வெடித்த வரலாற்றுப் புகழ்பெற்ற மக்கள் எழுச்சி சீனாவால் கொடூரமாக அடக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தீபெத்தின் ஆன்மிக மற்றும் அரசியல் தலைவரான 14ஆவது தலாய் லாமா தனது மக்களுடன் இந்தியாவுக்கு அகதியாக வரநேரிட்டது. அதன் பின்னர், இந்தியாவின் தரம்சாலாவில் இருந்தபடி 'தீபெத் அகதிகளின் நாடுகடந்த அரசாங்கம்' இன்றுவரை இயங்கி வருகிறது. தீபெத்தில் சாலைகள், ரயில்கள், நவீன கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் தான் பெரும் முதலீடுகளைச் செய்துள்ளதாகவும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் சீனா கூறினாலும், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தீபெத்தியர்களின் மதச் சுதந்திரம், மொழி உரிமை மற்றும் கலாசார அடையாளம் திட்டமிட்டு அழிக்கப்படுவதாகத் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றன.

### தாய்வானைக் குறிவைக்கும் 'ஒரே சீனா' கொள்கை

மறுபுறம், தாய்வானின் வரலாறு தீபெத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. 1949ஆம் ஆண்டு சீன உள்நாட்டுப் போரில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றபோது, தோற்றுப் போன சியாங் காய்-ஷெக் தலைமையிலான தேசியவாத அரசு (Kuomintang) தாய்வான் தீவுக்குத் தப்பி ஓடி, அங்கு தனது ஆட்சியை நிறுவியது. அன்று முதல் இன்றுவரை தாய்வான் தனக்கெனத் தனித்த அரசியல் அமைப்பு, பலமான ஜனநாயகத் தேர்தல் முறை மற்றும் உலகத்தரம் வாய்ந்த சுயாதீனப் பொருளாதாரக் கட்டமைப்புடன் ஒரு தனிநாடாகவே செயற்பட்டு வருகிறது.




இருப்பினும், 'ஒரே சீனா' (One China Policy) என்ற ஒற்றைக் கொள்கையின் அடிப்படையில், தாய்வான் தனது நாட்டை விட்டுப் பிரிக்க முடியாத ஒரு மாகாணம் என சீனா தொடர்ந்து அச்சுறுத்தி வருகிறது. தாய்வானை முழுமையாகத் தன்வசப்படுத்த இராணுவ அழுத்தம், பொருளாதாரச் செல்வாக்கு மற்றும் சர்வதேச இராஜதந்திரத் தனிமைப் படுத்தல் ஆகிய மூன்று கூர்மையான ஆயுதங்களைச் சீனா பயன்படுத்தி வருகிறது. சீனப் போர் விமானங்களும் அதிநவீன கடற்படைக் கப்பல்களும் தாய்வானைச் சுற்றியுள்ள கடல் மற்றும் வான் எல்லைகளில் அடிக்கடி அச்சுறுத்தும் வகையில் போர் ஒத்திகைகளை மேற்கொள்கின்றன. அதேநேரம், தாய்வானின் முக்கிய வர்த்தகக் கூட்டாளியாகத் தான் இருக்கும் பலத்தைப் பயன்படுத்தி, அதன் பொருளாதாரத்தை நசுக்க முயல்கிறது. மேலும், ஐநா சபை உள்ளிட்ட உலக அரங்குகளில் பல நாடுகள் தாய்வானைத் தனிநாடாக அங்கீகரிக்க முடியாதவாறு தனது வீட்டோ (ஏநவழ) அதிகார அரசியல் மூலம் முட்டுக்கட்டைகளையும் போட்டு வருகிறது சீனா.

### வல்லரசின் இரட்டை நிலையும் சர்வதேச விமர்சனமும்


தீபெத் மற்றும் தாய்வான் விவகாரங்களில் எழும் மிக அடிப்படையான கேள்வி மக்களின் 'சுயநிர்ணய உரிமை' (Self-determination) பற்றியதாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகள் மற்றும் இறையாண்மை குறித்து ஐநா மேடைகளில் முழங்கும் சீனா, தனது எல்லைக்குள் இருக்கும் தீபெத் மற்றும் தாய்வான் போன்ற பகுதிகளில் அதே கொள்கையை ஏற்கத் தயாராக இல்லை என சர்வதேச அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். தீபெத்தியர்களின் ஆன்மிக-கலாசார அடையாளமும், தாய்வானிய மக்களின் தாராளமய ஜனநாயக விருப்பங்களும் மதிக்கப்பட வேண்டும் என்பதே மனித உரிமை ஆர்வலர்களின் வாதம்.

ஆனால், சீனாவின் உலகப் பார்வை முற்றிலும் வேறானது. தீபெத்தும் தாய்வானும் வரலாற்று ரீதியாக சீனாவின் பூர்வீகப் பகுதிகள் என்பதால், இவை தங்களின் அசைக்க முடியாத உள்நாட்டு விவகாரங்கள் என சீனா திட்டவட்டமாகக் கூறுகிறது. தேசிய ஒருமைப்பாட்டையும் பிராந்திய இறையாண்மையையும் எத்தகைய விலை கொடுத்தாவது பாதுகாப்பது ஒரு நாட்டின் அடிப்படை உரிமை என்றும் பெய்ஜிங் வாதிடுகிறது.

### உலக ஒழுங்கின் எதிர்காலச் சோதனைக்களம்

தீபெத் மற்றும் தாய்வான் தொடர்பான விவகாரங்கள் வெறும் நிலப்பரப்பு சார் அரசியல் கேள்விகள் மட்டுமல்ல. அவை சுயநிர்ணய உரிமை, தேசிய இறையாண்மை, மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சர்வதேசச் சட்டம் ஆகியவற்றின் சந்திப்பில் நிற்கும் சிக்கலான உலகப் பிரச்சினைகளாகும். தீபெத்தில் ஒரு தொன்மையான இனத்தின் கலாசார மற்றும் மத அடையாளப் பாதுகாப்புப் பற்றிய விவாதம் நடைபெறுகிறது் அதேவேளை, தாய்வானில் ஒரு முற்போக்கான ஜனநாயகச் சமூகத்தின் அரசியல் எதிர்காலம் குறித்த கேள்வி எழுகிறது.

இந்த இரு விவகாரங்களும் ஆசிய - பசிபிக் பிராந்தியத்தின் எதிர்கால அமைதியையும், உலக வல்லரசுகளின் பலப் பரீட்சையையும் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக உள்ளன. சீனாவின் ஆதரவாளர்கள் இதனை இறையாண்மையைப் பாதுகாக்கும் நடவடிக்கையாகக் காண்கையில், சர்வதேச அரசியல் விமர்சகர்கள் இதனைச் சீனாவின் இரட்டை நிலை ஆதிக்க அரசியல் என்றே அப்பட்டமாகக் கருதுகின்றனர். எனவே, இப் பிரச்சினைகள் சீனாவின் உள்நாட்டு விவகாரம் என்ற எல்லையைத் தாண்டி, உலகளாவிய ஜனநாயகம் மற்றும் புதிய உலக ஒழுங்கு குறித்த சோதனைக் கற்களாக எதிர்காலத்திலும் தொடர்ந்து நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.



# எதிர்ப்பக்கம்

## உலக சினிமாவின் ஒற்றைச் சூரியன்: கிளின்ட் ஈஸ்ட்வுட்

கடந்த வாரங்களில் சர்வதேசத் திரைப்பட உலகமே ஒருவிதமான பெருமூச்சோடும், நெகிழ்ச்சியோடும் ஒரு செய்தியைப் பகிர்ந்து கொண்டு வருகிறது. உலக சினிமா வரலாற்றின் ஆகச்சிறந்த மற்றும் வாழும் காவியமான ஜாம்பவான் கிளின்ட் ஈஸ்ட்வுட் (Clint Eastwood) தனது 94-ஆவது வயதில் திரையுலகில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருக்கிறார். உலகெங்கும் உள்ள லட்சக்கணக்கான திரைப்பட ரசிகர்களின் உள்ளங்களில், குறிப்பாக வெஸ்டர்ன் (Western Movies) பாணித் திரைப்படங்களின் தீவிர ஆராதனைக்காரர்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த ஒரு மகா கலைஞனின் இந்த அறிவிப்பு எங்களுக்கெல்லாம் அதிர்ச்சி தரும் விஷயம் தான் .அவருடைய சினிமாப் பயணத்தை வெறும் வார்த்தைகளால் அத்தனை எளிதாகச் சுருக்கிவிட முடியாது. ‘தி குட், தி பேட் அண்ட் தி அக்லி’ (The Good, the Bad and the Ugly) போன்ற வெஸ்டர்ன் ரகப் படங்களில், வாயில் சுருட்டோடும், கண்களில் ஒருவித தீர்க்கமான கூர்மையோடும், கையில் துப்பாக்கியோடும் அவர் தோன்றி எதிரிகளை வீழ்த்தும் அந்த style இருக்கிறதே - எளிதில் மறக்க முடியுமா என்ன ? ‘மனிதாபிமானம் மற்றும் அறத்தின் எல்லைகள் என்ன?’ என்பதைத் தனது கதாபாத்திரங்கள் மூலமாகத் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கியவர் அவர். நடிகராக மட்டுமே தன்னைச் சுருக்கிக் கொள்ளாமல், பிற்காலத்தில் அவர் இயக்குநராக அவதாரமெடுத்தபோதுதான், திரையுலகம் அவருடைய அசாத்தியமான திறமையைக் கண்டு வியந்தது. ஆஸ்கர் விருதுகளை அள்ளிக் குவித்த ‘அன்ஃபோர்கிவன்’ (Unforgiven), ‘மில்லியன் டொலர் பேபி’ (Million Dollar Baby) போன்ற திரைப்படங்கள், மனித மனங்களின் விவரிக்க முடியாத ஆழமான உணர்வுகளையும், வாழ்வின் குரூரங்களையும், அதே நேரத்தில் மனித வாழ்க்கையின் மீதான தீராத காதலையும் பேசிய உன்னதப் படைப்புகள்.

“தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்”.

நமது வள்ளுவப் பெருந்தகையின் இந்த வரிகள் கிளின்ட் ஈஸ்ட்வுட் போன்ற மகா கலைஞர்களுக்குத்தான் அத்தனை கச்சிதமாகப் பொருந்தும். நீங்கள் தகுதியானவரா அல்லது கொஞ்சமும் அருகதையற்றவரா என்பதை நீங்கள் விட்டுச் செல்லும் எச்சங்கள், அதாவது நீங்கள் உலகிற்கு ஆற்றிச் சென்ற பங்களிப்புகளே காட்டும். அவர் தனது வாழ்நாளில் செதுக்கிச் சென்ற திரைப்படங்களும், உருவாக்கிய திரைமொழியும், கையாண்ட தொழில்நுட்ப உத்திகளும் வெறும் பொழுதுபோக்குச் சாதனங்கள் அல்ல் அவை உலக சினிமா வரலாற்றின் அழியாத செல்வங்கள்.

வயதான காலத்திலும், தொண்ணூறுகளைத் தாண்டிய பிறகும் கூட, சளைக்காமல் கமராவுக்கு பின்னால் நின்று வித்தை காட்டிய இந்த ஆசானின் அர்ப்பணிப்பு, இன்று திரையுலகுக்குள் நுழையும் ஒவ்வொரு இளைஞனுக்கும் ஒரு சிறந்த பாடம்.

இனிமேல் அவர் புதிய திரைப்படங்களை இயக்கப் போவதில்லை, புதிய கதாபாத்திரங்களில் திரையில் தோன்றி நம்மைத் திகைக்க வைக்கப் போவதில்லை என்ற செய்தி நெஞ்சைச் சற்று கனக்கச் செய்தாலும், அவர் விட்டுச் சென்ற அந்த வெற்றிடத்தை வேறு யாரும் அவ்வளவு எளிதில் நிரப்ப முடியாது. உலகம் முழுவதும் சினிமா இருக்கும் வரை கிளின்ட் ஈஸ்ட்வுட் என்ற பெயர் உலகெங்கும் உள்ள ரசிகர்களின் விவாதங்களிலும், சிந்தனைகளிலும் எப்போதும் வாழ்ந்து கொண்டே இருக்கும். ஹாலிவுட்டின் இந்த நித்தியக் கலைஞனுக்கு உண்மையான சினிமா ரசிகர்களின் சார்பில் எனது ரோயல் சல்யூட்!

## எதிர்காலம் - கரப்பான்பூச்சியின் கைகளில்!

கடந்த மே 15ஆம் திகதியன்று உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் “வேலையில்லாமல், எந்தத் தொழிலும் செய்யத் தகுதியற்ற சில இளைஞர்கள் கரப்பான்பூச்சிகளைப்போல ஒட்டுண்ணிகளைப்போல சமூக வலைத்தளங்களில் எல்லோரையும் தாக்கத் தொடங்குகிறார்கள்” என்று சர்ச்சைக்குரிய கருத்துக்களை இப்பொழுதுள்ள இளைஞர்களைப் பார்த்து குறிப்பிட்டார். இதனால் கோபமடைந்த அபிஜித் டிப்கே, (Abhijeet Dipke) என்ற இளைஞர் மே 17-ஆம் திகதி அன்று இன்ஸ்டாகிராமில் ‘கோக்ரோச் ஜனதா கட்சி’ (CJP) என்ற பக்கத்தைத் தொடங்கினார்.

ஒரு சில நாட்களில் இந்த instagram பக்கம் மிகப்பிரபலமாகி பலரும் பின்தொடரத் தொடங்கினர். ஒருகட்டத்தில் பின்தொடர்பவர்கள் எண்ணிக்கையில் பா.ஜ.க.வின் அதிகாரபூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தை விஞ்சியுள்ளது. இப்பொழுது கிட்டத்தட்ட 23 மில்லியன் பயநர்கள் பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

NEET-UG 2026 தேர்வு வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பாக, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகக் கோரி கரப்பான் பூச்சி மக்கள் இயக்கம் போராடும் என்று டிப்கே தெரிவித்துள்ளார்.இது குறித்து தனது X தளத்தில் பதிவிட்ட வீடியோ ஒன்றில், NEET வினாத்தாள் கசிவு மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பங்கள் இலட்சக்கணக்கான மாணவர்களைப் பாதித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய Dipke, “இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வழியைப் பின்பற்றி, நாம் அனைவரும் ஒன்றிணைந்து, தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்று அமைதியான முறையில் குரல் எழுப்புவதற்கான நேரம் வந்துவிட்டது, என்றும் தெரிவித்துள்ளார்.இந்தப் போராட்டத்திற்கு, கொம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆனி ராஜா (Annie Raja ), லடாக்கைச் சேர்ந்த பிரபல சமூக மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலரான சோனம் வாங்க்சுங் ஆகியோர் ஆதரவு தெரிவித் திருக்கின்றனர்.

என்ன நடக்கப்போகிறது, பிரதான் பதவி விலகுவாரா? இல்லை NEET தேர்வு மீண்டும் நடைபெறுமா? மாணவர்களின் எதிர்காலம் என்னவாகும். கரப்பான்பூச்சியின் கைகளில் தான் இருக்கிறது

## பிரக்ஞானந்தா - நோர்வேயில் தமிழன் ஆட்டம்

விளையாட்டுத் துறையில் இருந்து வரும் சில செய்திகள் நம்முடைய அன்றாட கவலைகளையும், விரக்திகளையும் துடைத்தெறிந்துவிட்டு, சிறிது நேரமாவது உன்னத தருணங்களை நமக்கு தருகிறது . அப்படியொரு அற்புதம் கலந்த நற்செய்திதான் கடந்த சில நாட்களாக நோர்வேயில் இருந்து நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. உலக செஸ் விளையாட்டின் உச்சகட்டப் போட்டியாகக் கருதப்படும், உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் பெருமைமிகு நோர்வே செஸ் (Norway Chess 2026) தொடரில், நமது தமிழ்நாட்டின் இளம் சிங்கமான பிரக்ஞானந்தா சாம்பியன் பட்டம் வென்று புதிய உலக வரலாறு படைத் திருக்கிறார்.

இந்தப் போட்டி ஒன்றும் அத்தனை சாதாரணமானதல்ல. உலக சாம்பியன்களும், செஸ் விளையாட்டின் ஆகச்சிறந்த ஜாம்பவான்களும், எத்தனையோ ஆண்டுகால அனுபவம் வாய்ந்த கிராண்ட் மாஸ்டர்களும் சதுரங்கப் பலகையின் முன்னால் மோதும் போர்க்களம் அது. அத்தகைய கடுமையான சூழலில் தனது அமைதியான தோற்றத்தோடும், தீர்க்கமான பார்வையோடும் களமிறங்கிய பிரக்ஞானந்தா உலகத்தரம் வாய்ந்த ஜாம்பவான்களை எல்லாம் தனது அசாத்தியமான, நுணுக்கமான காய் நகர்த்தல்களால் திணறடித்து இறுதியில் அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மகுடத்தைத் வென்றுள்ளார் .

ஒரு காலகட்டத்தில் நமது தமிழகத்தின் பெருமைக்குரிய விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு, செஸ் விளையாட்டில் இந்தியாவின் நிலை என்னவாகப் போகிறது, அந்த இடத்தை நிரப்பப் போவது யார் என்ற ஒரு பெரிய கேள்வியும், கவலையும் செஸ் ஆர்வலர்கள் மத்தியில் பரவலாக இருந்து வந்தது. அந்தக் கேள்விக்கு, தனது அசுரத்தனமான உழைப்பாலும், அபார திறமையாலும், தொடர்ச்சியான வெற்றிகளாலும் மிக அழுத்தமான பதிலளித்திருக்கிறார் பிரக்ஞானந்தா.

சதுரங்கம் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல் அது பொறுமை, திட்டமிடல், எதிராளியின் மனநிலையைக் கணித்தல் மற்றும் நெருக்கடியான நேரங்களில் நிதானம் தவறாமல் இருத்தல் போன்ற பல வாழ்வியல் தத்துவங்களை உள்ளடக்கிய ஒரு கலை. அந்தப் பலகையில் பிரக்ஞானந்தா காய்களை நகர்த்தும்போது, அதில் ஒரு முதிர்ச்சியும், ஆழமான ஞானமும் புலப்படுகிறது.

எத்தனையோ சோதனைகள், சவால்கள், கடுமையான போட்டிகள் என அனைத்தையும் கடந்து, இறுதிவரை அசாத்தியமான மனவலிமையோடு போராடி அவர் வென்ற இந்த சாம்பியன் பட்டம், ஒட்டுமொத்த இந்தியாவுக்கும், குறிப்பாக உலகத் தமிழினத்துக்கும் அளவிட முடியாத பெருமையைச் சேர்த்துள்ளது. உழைப்பும் அர்ப்பணிப்பும் இருந்தால் உலகத்தின் எந்தவொரு உச்சத்தையும் தொட முடியும் என்பதற்கு இந்த இளம் வயதுத் தமிழன் ஒரு வாழும் உதாரணம். இன்னும் பல உலக சம்பியன் பட்டங்களையும், எட்ட முடியாத சிகரங்களையும் தொட்டு, நம் தாயகத்துக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்பதே நமது ஆவல் .

## உலகக்கோப்பையும், தமிழர்களும்

96 வருட கால்பந்து வரலாற்றில் இதுவரை எந்தத் தமிழரோ அல்லது தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் உலகக்கோப்பை போட்டிகளில் விளையாடியது கிடையாது. முதன்முறையாக நிஷான் வேலுப்பிள்ளை எனும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆஸ்திரேலிய உலகக்கோப்பை அணியில் இடம் பெற்றிருக்கிறார். அவர் ஆஸ்திரேலியாவின் உள்ளூர் தொடரான A-Leagueல் Melbourne Victory அணிக்காக விளையாடி வருபவர்.ஆஸ்திரேலிய கால்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் Tony Popovic , உத்தேச அணியான 26 பேர் பட்டியலில் நிஷானை தேர்ந்தெடுத்திருக்கிறார். ஆதலால் அடுத்த வாரம் ஜூன் 13 அன்று துருக்கி அணிக்கு எதிராக நடைபெறும் உலக கோப்பை லீக் சுற்றுகளில் நிஷான் விளையாட வாய்ப்புள்ளது,

இதுமட்டுமின்றி இன்னொரு தமிழ் வம்சாவளி வீரரான சாமுவேல் முத்துசாமி (Samuel Moutoussamy) கொங்கோ தேசிய அணிக்காக விளையாடப் போகிறார். முத்துசாமி இந்திய-குவாதலூப்பியத் தந்தைக்கும் கொங்கோ தாய்க்கும் பிறந்தவர். இந்த Guadeloupe நாடானது கரீபியன் தீவுகளுக்கு அருகிலுள்ள பிரெஞ்சு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வரும் தீவாகும். இவரது தந்தையார் முத்துசாமியின் மூதாதையர் பல வருடங்களுக்கு முன்னாள் பிரஞ்சு காலனியாதிக்கத்தின் போது தமிழ் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த தலைமுறையினராவர். சாமுவேல் முத்துசாமிக்கு தமிழ் பற்றியோ ,தனது சந்ததி பற்றியோ தெரியாது. ஆனால் அவரின் பெயரில் தமிழ் இருப்பதே நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

இது ஒரு வரலாற்றுத் தருணம். உலக கோப்பை வரலாற்றில் தமிழர்களின் நடனத்தை கண்டுகளிக்க தயாராக இருக்கிறோம். கலக்கட்டும்.

## அண்ணாமலையின் புதிய ஆட்டம்: தமிழக அரசியலில் ஒரு புயலின் தொடக்கம்?

கடந்த 2021-ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றபொழுது, தமிழக அரசியல் களத்தில் மிக முக்கியமான ஒருவரவாகப் பார்க்கப்பட்டவர் பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த அண்ணாமலை. ஐபிஎஸ் (IPS) அதிகாரியாகத் தனது பணியைத் துறந்துவிட்டு, பொதுவாழ்விற்கு வந்த படித்த, பண்பாளர் என்று பலராலும் சிலாகிக்கப்பட்டவர். ஆனால், சமீபகாலமாக டெல்லி மேலிடத்தின் சில அதிரடி முடிவுகளாலும், தமிழக அரசியல் சூழல்களாலும் அவர் தான் வளர்த்த, ரத்தம் சிந்தி உழைத்த கட்சியிலிருந்தே ஓரங்கட்டப்பட்ட சூழலை நாம் பார்த்தோம்.

ஒரு காலத்தில் கோவை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் சில பகுதிகளைத் தவிர, பிற எந்தப் பகுதிகளிலும் குறிப்பிடத்தக்க வாக்கு வங்கியோ அல்லது தொண்டர் பலமோ இல்லாத ஒரு தேசியக் கட்சியாக இருந்த பாஜக-வானது, கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தின் மூலை முடுக்கெங்கும், கிராமப்புறங்கள் வரை பரவி, விவாதப் பொருளாக மாறியிருக்கிறதென்றால், அதற்கு அண்ணாமலையின் தீவிரமான உழைப்பும், ஆக்ரோஷமான அரசியல் அணுகுமுறையும் மட்டுமே காரணம் என்பதை நடுநிலையான அரசியல் விமர்சகர்கள் எவரும் மறுக்க முடியாது.

அண்ணாமலை எப்போதும் பா.ஜ.க-வை ஒரு தனிப் பெரும் சக்தியாக, திராவிடக் கட்சிகளுக்கு இணையான ஒரு மாற்று சக்தியாக வளர்க்க வேண்டும் என்றே ஆசைப்பட்டார். ஆனால், தேசியக் கட்சிகளின் தத்துவங்களும், டெல்லி மேலிடத்தின் கூட்டணிக் கணக்குகளும் எப்போதும் உள்ளூர் யதார்த்தங்களுடன் ஒத்துப்போவதில்லை.

இந்நிலையில், சமீபத்தில் டெல்லியில் இருந்து திரும்பிய அண்ணாமலை, ஒட்டுமொத்த தமிழக அரசியல் உலகமுமே அதிரும் வகையிலான ஒரு அதிரடி முடிவை அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார். ஆம், பாரதிய ஜனதாக் கட்சியில் இருந்து முற்றிலுமாக விலகி, தமிழகத்தில் ஒரு புதிய அரசியல் கட்சியைத் தொடங்கப் போவதாக அவர் அறிவித்துள்ளார். அண்ணாமலை ஒரு தனிப்பெரும் சக்தியாக வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார், ஆனால் ஒரு தேசியக் கட்சியின் வரம்புகளுக்குள்ளும், அதன் கூட்டணிக் கட்டுப்பாடுகளுக்குள்ளும் இருந்து கொண்டு தனது முழுத் திறமையையும், எண்ணங்களையும் வெளிப்படுத்த முடியாது என்பதை அவர் தீர்க்கமாக உணர்ந்ததன் விளைவே இந்த அதிரடி முடிவு என்று தோன்றுகிறது.

அதிமுக, திமுக போன்ற அரை நூற்றாண்டுகாலப் பாரம்பரியமிக்க, வலுவான கட்டமைப்பு கொண்ட திராவிடக் கட்சிகளுக்கு மாற்றாக, ஒரு புதிய அரசியல் பாதையை தேர்ந்தெடுக்க அண்ணாமலை துணிச்சலோடு முடிவு செய்துள்ளார். அண்ணாமலையின் இந்த புதிய ஆட்டம் மற்றும் புதிய கட்சியின் வரவு, வரவிருக்கும் காலங்களில் தமிழக அரசியலில் எந்த மாதிரியான அதிரடி மாற்றங்களையும், திருப்பங்களையும் ஏற்படுத்தப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

நான் முன்பே கூறியபடி, இனிமேல் தான் அவருடைய உண்மையான ஆட்டம் தொடங்கப் போகிறது. படித்தவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்று கூக்குரலிடும் இந்தச் சமூகம், ஒரு படித்த இளைஞன் சித்தாந்தக் கோட்பாடுகளைத் தாண்டித் தனிப் பாதை வகுக்கும்போது அவனுக்கு எந்த அளவுக்கு ஆதரவளிக்கப் போகிறது என்பதுதான் இங்கிருக்கும் மிகப்பெரிய கேள்வி. காலம் தான் இதற்குப் பதில் சொல்ல வேண்டும். இனிவரும் காலங்களில் போட்டி என்பது விஜய் VS அண்ணாமலையா? இல்லை அண்ணாமலை விஜயுடன் கூட்டணி சேர்ந்து திராவிடக்கட்சிகளை ஒழித்துகட்டுவாரா ? இல்லை அண்ணாமலையின் புதிய கட்சி தமிழகத்தில் காலூன்ற பாஜகவின் தந்திர முயற்சியா? எது எப்படியோ “அண்ணாமலை உன்னை இப்படி பார்த்து எத்தனை நாள் ஆச்சய்யா “என்று தொண்டர்களின் ஆரவாரம் நமக்கு நன்றாகவே கேட்கிறது.


XD
XDream Jewellery
Manufacturers & Importers of Modern Styles in 22K (916) Solid Gold
Where Tradition Meets Timeless Luxury
Discover gold jewellery, designed to sparkle for generations.
22K & 24K Pure Gold – Exquisite Designs, Unmatched Craftsmanship
Cash When You Need It
Trust You Can Count On
Bring your gold Top Dollar Paid
Safe & Secure • Same-Day Service
02 8677 4490
xdreamjewellery.com.au
08xdream@gmail.com
8 Aurelia St,
Toongabbie NSW 2146

# கர்மவினை!

● ஆர்.சனத்

இலங்கை அரசியலில் ‘சுரேஷ் சாலே’ என்ற பெயர், தற்காலத்தில் வெறும் இராணுவ அதிகாரியின் அடையாளமாக மட்டும் எஞ்சியிருக்கவில்லை. மாறாக, அது நாட்டின் ஒட்டுமொத்த அரசியல் திசையையும், உளவுத்துறையின் இரகசியங்களையும் உலுக்கிப் பார்க்கும் ஒரு பெரும் புயலாக மாறியுள்ளது.

கடந்த சில வாரங்களாக தேசிய மற்றும் சர்வதேச ஊடகங்களின் தலைப்புச் செய்திகளை ஆக்கிரமித்துள்ள சுரேஷ் சாலே,, இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான பயங்கரவாதத் தாக்குதலான 2019 உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) குண்டுவெடிப்பின் பின்னாலுள்ள அரசியல் முடிச்சுகளை அவிழ்க்கும் ஒரு முக்கியமான புள்ளியாகப் பார்க்கப்படுகின்றார்.

மறுபுறம், தென்னிலங்கை தேசியவாத அரசியலின் பிம்பமாகவும், ராஜபக்சக்களின் அதிவிசுவாசியாகவும் பார்க்கப்படும் சாலேயின் தற்போதைய நிலை, ‘அதிகாரப் பலம்’ எவ்வாறு காலமாற்றத்தில் தலைகீழாக மாறக்கூடும் என்பதற்கான மிகச்சிறந்த உதாரணமுமாகும்.

### யார் இந்த சுரேஷ் சாலே?

முப்பதாண்டுகளுக்கும் மேலாக பாதுகாப்பு மற்றும் இராஜதந்திரத் துறைகளில் மிக இரகசியமான, அதேநேரம் தீர்மானமிக்க பாத்திரங்களை வகித்தவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே.

1987 இல் இலங்கை இராணுவத்தில் சாதாரண காலாட் படை வீரனாக இணைந்த சாலே, மும்மொழிகளிலும் கொண்டிருந்த அசாதாரண புலமை காரணமாக மிக விரைவாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

வடக்கு, கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான உளவுத் தகவல்களைத் திரட்டுவதில் இவர் மிக முக்கியமன பங்கு வகித்தார். குறிப்பாக, விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் இருப்பிடத்தை துல்லியமாக அடையாளம் காட்டி, அவரைக் வான் தாக்குதல் மூலம் கொலை செய்வதற்குரிய உளவுத் தகவலை வழங்கியவர் சுரேஷ் சாலே தான் என்று சிங்கள தேசியவாத அரசியல்வாதியான விமல் வீரவன்ச பகிரங்கமாகப் பாராட்டியுள்ளார்.

போரின் பின்னர், 2006-2009 காலப்பகுதியில் பிரான்ஸின் பாரிஸ் தூதரகத்தில் முதல் செயலாளராகவும், 2012-2016 இல் இராணுவப் புலனாய்வுப் பணியகப் பணிப்பாளராகவும் பதவி வகித்தார்.

பின்னர் மலேசிய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகராகவும் (2016-2018) கடமையாற்றினார்.

2019 இல் இந்தியாவில் தேசிய பாதுகாப்புக் கற்கையை முடித்துத் திரும்பிய சாலே, கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் புலனாய்வு அமைப்பான SIS இன் தலைவராக நியமிக்கப்பட்டார். பொதுவாக பொலிஸ் அதிகாரிகளே வகிக்கும் இப்பொறுப்பில், இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டது அதுவே முதல்முறையாகும். 2024 இல் ஆட்சி மாற்றம் ஏற்படும் வரை அவர் இப்பதவியில் நீடித்தார்.

கோட்டாபய ராஜபக்சவின் 2005 பாதுகாப்புச் செயலர் பதவிக்காலம் தொட்டே சாலே அவரது நிழலாகச் செயற்பட்டார். இவரை ராஜபக்சக்களின் கட்டளைகளை நிறைவேற்ற எதையும் செய்யக்கூடிய விசுவாசி என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா கடுமையாகச் சாடியுள்ளார்.

### கைதுக்கான பின்னணி

2026 பெப்ரவரி 25 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் (CID) பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் (PTA) கீழ் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டமைக்கு, பிரித்தானியாவின் ‘சனல் 4’ ஊடகம் வெளியிட்ட ஆவணப்பட சாட்சியமே பிரதான அடித்தளமாகும்.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் (சிவநேசதுரை சந்திரகாந்தன்) நெருங்கிய உதவியாளராக இருந்து, பின்னர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்ற முகமட் ஹன்சீர் என்ற ஆசாத் மௌலானா இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்திய தேசிய தௌஹீத் ஜமாத் (NTJ) அமைப்பின் தலைவர் சஹ்ரான் ஹாஷிமுக்கும், சுரேஷ் சாலேவுக்கும் இடையில் புத்தளத்தில் ஒரு இரகசியச் சந்திப்பை ஏற்பாடு செய்யுமாறு சாலே தனக்கு அழைப்பு விடுத்ததாக ஆசாத் மௌலானா குற்றம் சாட்டினார்.

சஹ்ரான் குழுவினருக்கு உளவுத்துறை ஊதியம் வழங்கியதாகக் கூறப்படும் செய்தியை சரத் பொன்சேகாவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

### சுரேஷ் சாலேயின் மறுப்பு

குறித்த சந்திப்பு நடந்ததாகக் கூறப்படும் காலப்பகுதியில் தான் மலேசியாவிலும், குண்டுவெடிப்பு நடந்த போது இந்தியாவிலும் இருந்ததாகக் கூறி இக்குற்றச்சாட்டுகளை சாலே திட்டவட்டமாக நிராகரித்து வருகின்றார். உளவுத் தகவல்களைத் திரட்டுவதற்காக அடிப்படைவாதிகளுடன் தொடர்பு வைத்திருப்பது உளவுத்துறையின் இயல்பு என்ற வாதமும் இவருக்கு ஆதரவாக முன்வைக்கப்படுகின்றது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் ஒரு பாரிய ’அரசியல் சதித்திட்டம்’ இருந்ததா என்ற சந்தேகம் நீண்டகாலமாகவே நிலவுகிறது.

கத்தோலிக்க மக்கள் மீதும், சர்வதேச உல்லாசப் பயணிகள் மீதும் நடத்தப்பட்ட கொடூரமான இந்தத் தாக்குதல், நாட்டில் ஒரு தேசிய பாதுகாப்புப் பேரவலத்தை உருவாக்கியது.

இந்தச் சூழலைப் பயன்படுத்தி, ‘நாட்டைப் பாதுகாக்க ஒரு பலமான பௌத்த சிங்கள் தலைவர் தேவை’ என்ற பிம்பத்தை உருவாக்கி கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டு வர உளவுத்துறை அதிகாரிகளே முஸ்லிம் இளைஞர்களைப் பயன்படுத்தினரா என்ற பலத்த சந்தேகம் அரசியல் களத்தில் இன்றும் விவாதிக்கப்படுகிறது.

### ராஜபக்ச தரப்பு வாதம்

இக்குற்றச்சாட்டை முற்றாக மறுக்கும் ராஜபக்ச தரப்பு, 2018 உள்ளூராட்சித் தேர்தலிலேயே தாம் அமோக வெற்றி பெற்றுவிட்டதால், ஆட்சிக்கு வர இவ்வாறான கொடூரத் தாக்குதலை நடத்த வேண்டிய தேவை தமக்கு இருக்கவில்லை என்றும், பௌத்த தலைவரை ஆட்சிக்குக் கொண்டுவர முஸ்லிம் இளைஞர்கள் தற்கொலைத் தாக்குதல் நடத்துவார்கள் எனக் கருதுவது முட்டாள்தனம் என்றும் வாதிடுகிறது.

### புதிய அரசாங்கத்தின் விசாரணை வேட்டை

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்த பின்னர், ஈஸ்டர் தாக்குதல் விசாரணை வேகம் பெற்றுள்ளது. பிள்ளையான் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். மிக முக்கியமான திருப்பமாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உள்ளிட்ட இரு உயர் அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில்தான், மே 2026 இல் கைது செய்யப்பட்டு 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சுரேஷ் சாலே, ஜூன் 05 முதல் சி.ஐ.டி. காவலில் தனக்கு மனிதாபிமானமற்ற சித்திரவதைகள் நடப்பதாகக் கூறி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தற்போது அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் சுரேஷ் சாலேவை மனிதாபிமான முறையில் நடத்துமாறு வலியுறுத்தியும், நீதிகோரியும் கொழும்பில் சத்தியாக்கிரக போராட்டம் ஜூன் 08 ஆம் திகதி முதல் ஆரம்பமானது. ஜூன் 10 ஆம் திகதி போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

புலிகளை ஒழிப்பதற்கு உதவியதால், தமிழ் டயஸ்போராக்களின் தேவைக்காகவே சுரேஷ் சாலே பழிவாங்கப்படுகின்றார் என இந்த விடயத்திலும் புலி புராணம் ஓதி மகிழ்கின்றார்கள் மஹிந்த தரப்பினர்.

போர் வீரரை இப்படி பழிவாங்கக்கூடாது எனவும் வலியுறுத்துகின்றனர்.

இந்த அரசியல் கொந்தளிப்புக்கு மத்தியில், பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக கத்தோலிக்க சபை முன்வைத்துள்ள கருத்து மிகவும் முதிர்ச்சியானது .

“போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சுரேஷ் சாலே மட்டும் அல்ல பாதுகாப்பு தரப்பினர் எவரேனும் ஒத்துழைப்பு வழங்கி இருந்தால் அதனை நாம் மதிக்கின்றோம். இதற்காக அவர்கள் தவறிழைத்திருந்தால் அதனை மூடி மறைக்க முடியாது.

படுகொலை செய்வதற்கு எந்தவொரு படையினருக்கும் உரிமை கிடையாது. குற்றச்செயல்களில் ஈடுபடவும், கொள்ளைகளில் ஈடபடவும் எந்தவொரு படையினருக்கும் உரிமை கிடையாது. எனவே, நாட்டுக்கான சேவை என்பது வேறு, குற்றச்செயல் என்பது வேறு. இவை இரண்டையும் நாம் பிரித்து பார்க்க வேண்டும்.

இதற்கமைய நாட்டுக்காக சேவை செய்திருந்தால் நாம் அதனை மதிப்போம். அநீதி இழைத்திருந்தால் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

சித்திரவதை இடம்பெற்றுள்ளதா அல்லது இல்லையா என்பது நீதிமன்றம் ஊடாகவே தெரியவரவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்துவைப்பு என்பது புதிய விடயம் அல்ல. இதற்கு முன்னரும் பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. எனவே, தனி நபருக்காக சட்டத்தை மாற்றும் அணுகுமுறை பின்பற்றப்படக்கூடாது. விசாரணை தொடர்ந்து இடம்பெற வேண்டும்.

உங்கள் தாய் அல்லது தந்தையை படை வீரர் ஒருவர் கொன்றுவிட்டார். அவர் போரில் ஈடுபட்டவர், போரை முடிக்க பங்களிப்பு செய்ததால் விசாரணை தேவை இல்லை, தண்டனை தேவை இல்லை எனக் கூறமுடியுமா? எனவே, குற்றத்தின் முன் தகுதி, தராதரம் என்பது முக்கியம் அல்ல. விசாரணைக்கு எவரும் இடையூறு ஏற்படுத்தக்கூடாது” - என்பதே கத்தோலிக்க சபையின் கருத்தாகும்.

### ஏன் இந்த திடீர் பதற்றம்?

எதிரணி எனக் கூறிக்கொள்ளும் தரப்பில் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அரசியல் நாடகம் என ஆளுங்கட்சி விமர்சித்துள்ளது.

“சுரேஷ் சாலே சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. விசாரணைகளை திசைதிருப்பவே சில அரசியல்வாதிகள் முற்படுகின்றனர். கோட்டாபய ராஜபக்ச உட்பட இருவருக்கு பயணம் தடை விதிக்கப்பட்ட பின்னரே குழப்பம் அடைந்துள்ளனர்.”

இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது சுரேஷ் சாலே விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு ,

“சுரேஷ் சாலேவுக்கு தடுப்பு காவலின்கீழ் சித்திரவதை இடம்பெறவில்லை. அவருக்காக விசேட நடைமுறையும் பின்பற்றப்படவில்லை. சிஐடியில் தடுப்பு காவலின்கீழ் இருக்கும் நபரொருவர் தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறைகளே பின்பற்றப்பட்டுவருகின்றன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை திசைதிருப்ப வேண்டிய தேவைப்பாடு சிலருக்கு இருக்கின்றது. அதன் பின்னணியில் உள்ள அரசியல் தொடர்பையும் திசை திருப்ப முற்படுகின்றனர்.

குறித்த விசாரணைகளை விரைவில் நிறைவுக்கு கொண்டு வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதே எமது பொறுப்பாகும்.

சுரேஷ் சாலே சித்திரவதை செய்யப்படவில்லை. 90 நாட்கள் அவர் அமைதியாகவே இருந்தார். ஆனால் கோட்டாபய ராஜபக்ச உட்பட இருவருக்கு எதிராக பயணத்தடை விதிக்கப்பட்ட பின்னரே சிலர் குழப்பம் அடைந்துள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டம் நிச்சயம் நீக்கப்படும். தற்போது அச்சட்டம் அமுலில் இருப்பதால் அச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை இடம்பெறுகின்றது.” - என்றார்.

### கர்மவினையின் சுழற்சி

சுரேஷ் சாலே விவகாரத்தில் உற்றுநோக்க வேண்டிய மிக முக்கியமான சமூக-அரசியல் உண்மை கர்மவினையின் சுழற்சி ஆகும்.

கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முறையான விசாரணைகளின்றி கைது செய்யப்பட்டு, வருடக் கணக்கில் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டபோது, இதே விமல் வீரவன்ச மற்றும் கம்மன்பில போன்ற தீவிர தேசியவாதிகள் அந்த வாதைகளை நியாயப்படுத்தினர் அவற்றுக்கு “புலி முத்திரை” குத்தினர்.

சுரேஷ் சாலே வழங்கிய உளவுத் தகவல்களின் அடிப்படையில் எத்தனை தமிழ் இளைஞர்கள் இவ்வாறான கொடூரங்களை அனுபவித்திருப்பார்கள் என்பது வரலாறு. ஆனால் இன்று, அதே பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தங்களின் ‘நம்பிக்கைக்குரிய’ அதிகாரி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படும்போது, அதே தேசியவாதிகள் மனிதாபிமானம் பற்றியும், சித்திரவதைக்கு எதிரான மனித உரிமைகள் பற்றியும் மேடைகளில் கூக்குரலிடுகின்றனர்.

சுரேஷ் சாலேயின் கைது என்பது ஒரு தனிநபர் சார்ந்த விவகாரம் அல்ல. அது இலங்கையின் உளவுத்துறை, அரசியல் அதிகாரம் மற்றும் குற்றங்களுக்கான தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை உடைப்பதற்கான ஒரு பரீட்சார்த்தக் களம்.

கத்தோலிக்க சபை குறிப்பிட்டது போல, நாட்டுக்குச் செய்த சேவையைக் காட்டி ஒரு பாரிய மனிதப் படுகொலையின் சதியை மூடிமறைக்க முடியாது. சட்டம் தன் கடமையைச் செய்ய அனுமதிக்கப்படுவதும், அரசியல் தலையீடற்ற வெளிப்படையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதும் மட்டுமே, ஈஸ்டர் தாக்குதலில் பலியான அப்பாவி ஆன்மாக்களுக்கும், இலங்கைத் திருநாட்டின் எதிர்கால நீதித்துறைக்கும் செய்யக்கூடிய ஒரே நியாயமாகும்.

# பாலியல் தொல்லை: சிக்கிய இலங்கை வைத்தியர்!



ஆஸ்திரேலியா, பெர்த்திலுள்ள மருத்துவ நிலையமொன்றில் அக்குபஞ்சர் சிகிச்சையின் போது பெண் நோயாளி ஒருவரிடம் பாலியல் ரீதியாக அநாகரீகமாக நடந்துகொண்ட இலங்கை வம்சாவளி வைத்தியரொருவர் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு கடந்த 2008 ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்த 49 வயதான வினோ காரியகரவண என்பவரே, பெர்த் நீதவான் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார்.

முதுகுவலியால் பாதிக்கப்பட்ட 30 வயதுடைய சர்வதேச மாணவி ஒருவர் 2025 ஜூலை மாதம், கார்லைல் மருத்துவ மையத்திற்கு சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

அவருக்கு தசைப்பிடிப்பு இருப்பதாகக் கூறி, அக்குபஞ்சர் சிகிச்சைக்கு மறுநாள் வருமாறு வைத்தியர் காரியகரவண அழைத்துள்ளார்.

இதற்கமைய அங்கு வந்த மாணவிக்கு சுமார் 90 நிமிடங்கள் நீடித்த சிகிச்சையின்போது, நோயாளி மருத்துவமனை உடை அணிந்திருந்த நிலையில், அவரிடம் தவறான முறையில் குறித்த வைத்தியர் நடந்துகொண்டுள்ளார்.

அந்தரங்கப் பகுதிகளைத் தொட்டு மசாஜ் செய்துள்ளார். மேலும், அந்தப் பெண்ணின் பாலியல் வரலாறு குறித்தும் தேவையற்ற கேள்விகளை எழுப்பியுள்ளார்.

சிகிச்சை முடிந்தவுடன், இந்த வைத்தியர், "இந்தச் சிகிச்சை மிகவும் தொழில்முறை ரீதியாகவும், திருப்திகரமாகவும் அமைந்தது" என்று ஒரு போலி பின்னூட்டப் படிவத்தை தயாரித்து, அதில் கையெழுத்திடுமாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பெண் முன்வைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணை இடம்பெற்றது.

நீதிமன்ற விசாரணையின் போது, மருத்துவரின் சட்டத்தரணி, "இது தற்செயலாக நடந்த தொடுதல்" என்று வாதிட்டார்.

எனினும், நீதவான் பெலிண்டா கோல்மேன் இந்த வாதத்தை நிராகரித்தார்.


மருத்துவர் வேண்டுமென்றே பாலியல் ரீதியாகத் தூண்டப்பட்டு இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளார் என்றும், பாலியல் வரலாறு குறித்துக் கேட்பதற்கு எந்தவொரு மருத்துவக் காரணமும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தனது குற்றத்தை மறைப்பதற்காகவே மருத்துவர் அந்தப் போலிப் படிவத்தில் கையெழுத்து வாங்கியுள்ளார் என்பதையும் நீதவான் உறுதிப்படுத்தினார்.

ஆஸ்திரேலிய சுகாதாரப் பயிற்சியாளர் ஒழுங்குமுறை முகமையின் படி, அவர் இன்னும் பதிவுசெய்யப்பட்ட ஒரு மருத்துவ பயிற்சியாளராகவே உள்ளார்.

எனினும், அவரது இணையத்தள விபரக் குறிப்பில், அவர் தற்போது "ஆண் நோயாளிகளுக்கு மட்டுமே" சிகிச்சை அளிக்கிறார் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

# மெல்பேர்ன் ஆசிரியர் இந்தியாவில் கொடூரமாகக் கொலை



இந்தியாவில் கடந்த மாதம் மாயமான ஆஸ்திரேலியா, மெல்பேர்ன் நகர கணித ஆசிரியர் சுனில் சர்மா, அவரது சகோதரராலேயே படுகொலை செய்யப்பட்டு, கால்வாய் ஒன்றில் உடல் வீசப்பட்ட அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

66 வயதான சுனில் சர்மா, தனது பணி ஓய்வுக் காலத்தைத் திட்டமிட்டு வந்த நிலையில், வடமேற்கு இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தசரஸ் நகருக்குச் சென்றிருந்தார்.

அங்கு தனக்குச் சொந்தமான முதலீட்டு நோக்கம் கொண்ட சொத்து ஒன்றை விற்பனை செய்வதற்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தபோதே, கடந்த மே 22 ஆம் திகதி அவர் திடீரென மாயமானார்.

பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அமிர்தசரஸ் காவல்துறையினர், சுனில் சர்மாவின் சகோதரர் சதீஷ் சர்மாவைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்தனர்.

சுனில் சர்மாவுக்கு தூக்க மாத்திரைகள் கலந்த பானத்தைக் கொடுத்து, பின்னர் பேஸ்போல் மட்டையால் தலையில் பலமாகத் தாக்கி சதீஷ் சர்மா அவரைக் கொலை செய்துள்ளதாக காவல்துறையினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

காவல்துறை சிரேஷ்ட கண்காணிப்பாளர் கன்வல்பிரீத் சிங் இதுகுறித்துக் கூறுகையில்,

"கொலைக்குப் பிறகு இரத்தக் கறை படிந்த மெத்தை மற்றும் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட பேஸ்போல் மட்டை ஆகியவற்றை அகற்றுவதற்கு சதீஷ் சர்மாவின் மனைவியும் மகனும் உதவியுள்ளனர்" என்று தெரிவித்தார்.

மேலும், இந்த மூன்று பேரும் சேர்ந்து உடலை ஒரு கால்வாயில் வீசியுள்ளதாகவும், உடலை மீட்பதற்கான தேடுதல் பணிகளில் காவல்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



# ஒரு லட்சம் ராட்சத கரப்பான் பூச்சிகள் பறிமுதல்!

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸில் உள்ள ஒரு வணிக இனப்பெருக்க மையத்திலிருந்து சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு கரப்பான் பூச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிட்னியில் இருந்து மேற்கே 200 கி.மீ தொலைவில் உள்ள Bathurst என்ற இடத்திலேயே குறித்த நிலையம் அமைந்துள்ளது.

மடகாஸ்கர் ஹிஸ்ஸிங் Madagascar hissing மற்றும் துபியா Dubia போன்ற சட்டவிரோத இனங்களைச் சேர்ந்த இவை, இரண்டு லட்சம் ஆஸ்திரேலிய டொலர் பெறுமதி கொண்டவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு இனங்களையும் ஆஸ்திரேலியாவிற்குள் சட்டபூர்வமாக இறக்குமதி செய்யவோ, வளர்க்கவோ, இனப்பெருக்கம் செய்யவோ அல்லது விற்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூச்சிகள் பெரும்பாலும் ஊர்வன வகை செல்லப்பிராணிகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்டாலும், இவை பரப்பக்கூடிய நோய்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் காரணமாகவே தடை செய்யப்பட்டுள்ளன.

இவ்வளவு பெரிய அளவிலான சட்டவிரோதப் பூச்சிகள் பிடிபடுவது ஆஸ்திரேலிய வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

பிடிபட்ட பூச்சிகள் அனைத்தும் அழிக்கப்பட உள்ள நிலையில், செல்லப்பிராணி வளர்ப்போர் சட்டபூர்வமான மாற்று உணவுகளை பயன்படுத்துமாறு அரசு எச்சரித்துள்ளது.

தடையை மீறி இவற்றை வளர்ப்பவர்கள் அல்லது விற்பனை செய்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்

# Aukus திட்டம் மீளாய்வு: குழு நியமனம்!



ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய பாதுகாப்பு ஒப்பந்தமான ஆக்கஸ் (Aukus) அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் திட்டத்தை மறுஆய்வு செய்ய ஒரு புதிய சுயாதீன விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் அமைச்சர் பீட்டர் காரெட் தலைமையிலான இக்குழு, இந்த பிரமாண்டமான செலவு மற்றும் நாட்டின் இறையாண்மை மீதான அதன் தாக்கம் குறித்து பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்கவுள்ளது.

இந்த ஆய்வில் முன்னாள் ராணுவ அதிகாரிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் உட்பட ஐந்து முக்கியமான உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

குறிப்பாக, அணுக்கழிவு மேலாண்மை, பிராந்திய அமைதி மற்றும் சீனாவுடனான உறவு ஆகியவற்றில் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்து இந்த விசாரணை விரிவாக ஆராயும்.

ஆஸ்திரேலிய அரசு இந்த வெளிப்படையான ஆய்வை வரவேற்றுள்ள நிலையில், ஒக்டோபர் மாதம் இதன் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அமெரிக்காவிடமிருந்து பயன்படுத்தப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கும் ஆஸ்திரேலியாவின் முடிவு தற்போது தீவிரமான பொது விவாதத்திற்கு உள்ளாகியுள்ளது.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
282-284, londales st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


MS JEWELRY WORK SHOP
No:- 87, McIntyre Road, Sunshine North VIC 3020 (Inside Barber Shop)
WORKING DAYS
MON - SUN (10 AM TO 6 PM)
WEDNESDAY (CLOSED)
+61 469 033 450
காது குத்துதல், பழைய நகைகள் திருத்துதல், உடைந்த நகைகள்
ஒட்டுதல் மற்றும் புதிய நகைகள் என்பன செய்து கொடுக்கப்படும்
Ear Piercing, Old Jewelry Repair, Broken Jewelry Repair, and New Jewelry Will Be Provided

# மாத ராசிபலன்



## மேடம்

மேஷ ராசியினருக்கு இந்த மாதம் புதிய முயற்சிகளில் வெற்றியைக் கொடுக்கும் மாதமாக அமையப் போகிறது. உங்கள் ராசிநாதன் செவ்வாயின் சாதகமான நிலையால், உடலில் புதிய ஆற்றலும் மனத்தைரியமும் பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவோடு புதிய பொறுப்புகளைக் கையாள்வீர்கள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கைக்கு வரும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த பண வரவுகள் ஜுன் 15-க்குப் பிறகு சீராகும். குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுகள் நல்லபடியாக முடியும். கணவன்-மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். ஆரோக்கியத்தில் சிறு அசதிகள் தோன்றினாலும், முறையான ஓய்வு உங்களைக் காக்கும்.

## கடகம்

கடக ராசியினருக்கு விரய ஸ்தானத்தில் கிரகங்களின் சஞ்சாரம் இருப்பதால், சுபச் செலவுகள் அதிகரிக்கும். தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும்போது விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்கள் வேலைகளில் அலட்சியம் காட்டாமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் தோன்றி மறையும், விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. நண்பர்கள் விஷயத்தில் சற்று எல்லைத் தூரத்தைக் கடைப்பிடியுங்கள். முறையற்ற தூக்கமின்மையால் உடல் சோர்வு ஏற்படலாம், தியானம் மற்றும் உடற்பயிற்சி மூலம் மன அமைதி பெறலாம்.

## துலாம்

துலாம் ராசியினருக்கு ஜுன் மாதம் பாக்கியங்கள் பெருகும் யோகமான மாதமாக இருக்கும். ஒன்பதாம் வீடான பாக்கிய ஸ்தானம் பலம்பெறுவதால், நீண்ட நாட்களாக தடைப்பட்ட பூர்வீக சொத்து விவகாரங்கள் உங்களுக்குச் சாதகமாக முடியும். தூரத்துத் தேசங்களில் இருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உயர் கல்வி படிக்கும் மாணவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். தொழிலில் எதிர்பார்த்ததை விட லாபம் இருமடங்காக உயரும். குடும்பத்துடன் ஆன்மீகப் பயணங்கள் சென்று வர திட்டமிடுவீர்கள். பெற்றோரின் ஆசியும் ஆதரவும் முழுமையாகக் கிடைக்கும். உடல்நலம் சீராக இருக்கும்

## மகரம்

மகர ராசியினருக்கு ஜுன் மாதம் வெற்றிகளையும், எதிர்ப்புகளை முறியடிக்கும் துணிச்சலையும் தரும். ஆறாம் வீட்டில் கிரகங்கள் வலுவாக இருப்பதால், நீண்ட நாள் கடன் தொல்லைகள் மற்றும் மறைமுக எதிர்ப்புகள் யாவும் காணாமல் போகும். வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறன் வெளிப்படும், புதிய பதவிகள் தேடி வரும். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் மூலம் லாபம் பெருகும். குடும்பத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். ஆரோக்கியத்தில் இருந்த நீண்ட நாள் உபாதைகள் நீங்கி, உடல்நிலை வெகுவாக முன்னேற்றமடையும்.

## இடபம்

ரிஷப ராசியினருக்கு இந்த மாதம் நிதானத்துடனும் திட்டமிடலுடனும் செயல்பட வேண்டிய காலமாகும். தன வரவு திருப்திகரமாக இருந்தாலும், தேவையற்ற ஆடம்பரச் செலவுகள் சேமிப்பைக் கரைக்கக்கூடும். எனவே வரவு-செலவில் கவனம் தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகள் கூடும். புதிய தொழிலைத் தொடங்குவதை இந்த மாத இறுதிவரை தள்ளிப்போடுவது நல்லது. குடும்ப உறுப்பினர்களுடன் பேசும்போது வீண் விவாதங்களைத் தவிர்ப்பது அமைதிக்கு வழிவகுக்கும்.

## சிம்மம்

சிம்ம ராசியினருக்கு இந்த மாதம் லாபங்கள் நிறைந்த மாதமாக அமையவுள்ளது. லாப ஸ்தானத்தில் கிரகங்களின் கூட்டணி வலுவாக இருப்பதால், பொருளாதார நிலை மிக உயரிய நிலையை எட்டும். நீண்ட நாள் ஆசையான சொத்து அல்லது வாகனம் வாங்கும் யோகம் கைகூடி வரும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரமும், பதவி உயர்வும் கிடைக்க வாய்ப்புள்ளது. சுயதொழில் செய்பவர்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும், உறவினர்கள் வருகையால் சுபச் செலவுகள் ஏற்படலாம்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு இந்த மாதம் எதிலும் கூடுதல் எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும் செயற்பட வேண்டிய அஷ்டமச் சஞ்சார காலமாகும். தேவையற்ற வார்த்தைகளைப் பேசுவதைத் தவிர்ப்பது குடும்பத்திலும், வெளி இடங்களிலும் அமைதியைத் தரும். பணப் பரிவர்த்தனைகளில் பிணைக்காக கையெழுத்து போடுவதைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரித்தாலும், உங்கள் உழைப்பால் அதை முறியடிப்பீர்கள். புதிய தொழில் முயற்சிகளை இந்த மாதம் தவிர்ப்பது உத்தமம். வாகனங்களை இயக்கும்போது கவனம் தேவை.

## கும்பம்

கும்ப ராசியினருக்குஇந்த மாதம் புத்தி கூர்மையாலும், திட்டமிடலாலும் காரியங்களை சாதிக்கும் மாதமாகும். பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவடைவதால், புதிய ஆக்கபூர்வமான சிந்தனைகள் தோன்றும். கலை மற்றும் இலக்கியத் துறையில் உள்ளவர்களுக்குப் புதிய வாய்ப்புகளும் புகழும் கிடைக்கும். உத்தியோகத்தில் உங்களின் புதிய யோசனைகள் வரவேற்கப்படும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்திகள் வந்து சேரும். பூர்வீக சொத்துக்களில் இருந்து எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் நிகழும்.

## மிதுனம்

மிதுன ராசியினருக்கு இந்த மாதம் தொட்டதெல்லாம் துலங்கும் பொன்னான மாதமாக அமையப்போகிறது. ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் உங்கள் ஆளுமைத் திறனும், சமூகத்தில் மதிப்பும் உயரும். தடைப்பட்டுக் கொண்டிருந்த காரியங்கள் அனைத்தும் மிக எளிதாக நிறைவேறும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் இருந்து புதிய வேலைவாய்ப்பு தேடி வரும். கூட்டுத் தொழிலில் நல்ல லாபமும், கூட்டாளிகளிடையே இணக்கமான சூழலும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சுப நிகழ்ச்சிகளால் வீடே களைகட்டும். பிள்ளைகளின் கல்வியில் நல்ல முன்னேற்றம் காணப்படும். ஆரோக்கியம் மிகச் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

கன்னி ராசியினருக்கு இந்த மாதம் தொழில் மற்றும் கர்ம ஸ்தானத்தில் நல்ல மாற்றங்கள் நிகழும். பணியிடத்தில் உங்கள் உழைப்பிற்கு மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். சிலருக்கு விரும்பிய இடமாற்றமும், ஊதிய உயர்வும் கிடைக்கப் பெறலாம். வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாண்டு லாபத்தைப் பெருக்குவீர்கள். அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் தடையின்றி வந்து சேரும். குடும்பத்தில் தந்தையின் உடல்நலனில் சற்று அக்கறை காட்டுவது நல்லது. தம்பதிகளுக்கு இடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

## தனுசு

தனுசு ராசியினருக்கு இந்த மாதம் உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாதமாக அமையும். களத்திர ஸ்தானம் பலம்பெறுவதால், திருமண வயதில் உள்ளவர்களுக்கு நல்ல வரன் அமைந்து சுபகாரியங்கள் கைகூடும். கூட்டு வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும், லாபமும் சீராக இருக்கும். உத்தியோகஸ்தர்கள் தங்களின் சக ஊழியர்களிடம் இணக்கமாகச் செயற்படுவது நல்லது. நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த நிதியுதவி சரியான நேரத்தில் கிடைக்கும். கணவன்-மனைவி இடையே புரிதல் அதிகமாகும். ஒவ்வாமை மற்றும் கண் சம்பந்தமான சிறு தொல்லைகள் தோன்றி மறையும், முறையான மருத்துவ ஆலோசனை பலன் தரும்.

## மீனம்

மீன ராசியினருக்கு இந்த மாதம் சுக போகங்களும், வசதிகளும் பெருகும் மாதமாக அமையப்போகிறது. நான்காம் வீடு பலம்பெறுவதால் புதிய வீடு, மனை வாங்குவது அல்லது வீட்டைப் புதுப்பிக்கும் பணிகளில் ஈடுபடுவீர்கள். தாயின் வழியில் இருந்து எதிர்பார்த்த ஆதரவும், தன லாபமும் கிடைக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமை குறைந்தாலும், இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. வியாபாரத்தில் சீரான வளர்ச்சி காணப்படும். குடும்ப உறவினர்களிடையே இருந்த மனக்கசப்புகள் நீங்கி ஒற்றுமை உண்டாகும். வாகனப் பயணங்களின் போது கவனமாக இருப்பது நல்லது. சளி மற்றும் மார்பு சளி போன்ற உபாதைகள் வரக்கூடும் என்பதால் எச்சரிக்கை தேவை.

HavenHill
REAL ESTATE

# Thinking of Selling? Sell Smart pay only 1% Commision.

**Selling your home is a big moment.**

That's why we focus on the most important things:
getting you the strongest result, with a smarter, fairer fee structure.

**With Sell Smart, you get:**

- Professional marketing
- Strategic buyer targeting
- Confident negotiation
- A premium, boutique experience

SELL SMART.
SAVE MORE.
ACHIEVE BETTER.



**Shagi Pathmanathan**
Founder / Director
**0413 076 585**
shagi@havenhillrealestate.com.au

**Yasantha De Silva**
Founder / Director
**0432 805 336**
yasantha@havenhillrealestate.com.au

Level 10, 14 Mason St, Dandenong VIC 3175
havenhillrealestate.com.au

Terms and Conditions apply*


PARBOILED RICE
புளுங்கல் அரிசி
ROSA KEKULU RICE
1kg
Muthu Sampa Rice
1kg
ATHAVAN
PRODUCTS
Ginger Powder
Jaffna
CURRY POWDER
PREMIUM
MOONG DAL
(Roasted)
Soya Meat
CHILLI POWDER
EVERYTHING
YOU NEED
ALL IN ONE PLACE!
FAST
DELIVERY
THIS WAY UP
ஆதவன்
ATHAVAN
Cargo Service
Australia to
Sri Lanka
Sri Lanka to
Australia
BEST SERVICES:
Cargo & Shipping Services
Groceries & Household Items
Spices Export & Import
Pooja Products
Boutique Dress & Saree Collection
Contact Us For Details
Sri Ayyappa Pvt LTD
+61 449 722 392
40 David street, Dandenong VIC 3175, Australia
ஆதவன்
ATHAVAN
ஸ்ரீ
AYYAPPA
ATHAVAN